விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 243 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 02 ஞாயிற்றுக்கிழமை (18.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ‘வோட் மணி மீற்றர்’
### பிரசாரச் செலவுகளை கண்காணிக்க புதிய இணையம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசார செலவுகளைக் கண்காணிக்கும் வகையில் இணையத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்திற்கு "வோட் மணி மீற்றர்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளம் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம்மற்றும்பெஃப்ரல் ▷19

## பொருட்களின் விலைகள் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, குறைக்கப்பட்ட உணவுப் ▷19

### அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு
## சுதந்திரமான வாக்களிப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்
### பெஃப்ரல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தை 2025ஆம் ஆண்டு முதல் 25,000 ரூபாயால் அதிகரிக்கும் அமைச்சரவையின் அண்மைய தீர்மானத்திற்கு எதிராகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அரசின் குறித்த முடிவானது ஜனாதிபதித் தேர்தலில் அரச ஊழியர்களின் சுதந்திரமான வாக் ▷19

### ஜனாதிபதித் தேர்தலில்
# தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன?
### தமிழ் எம்.பிக்களிடம் வினவிய இந்தியத் தூதுவர்

*(கொழும்பு)*

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன? என சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பிக்களிடம் வினவினார் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா**



தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கும் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே இந் ▷02

### யாழ்.போதனாவில் சத்திரசிகிச்சை மூலம்
## துண்டாக்கப்பட்ட கைகள் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரண்டு துண்டுகளாகத் துண்டிக்கப்பட்ட கை சத்திரசிகிச்சையின் பின்னர் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

குறித்த தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தனது சமூகவலைத்தளப் பதிவில் ▷19

### கிளிநொச்சி வைத்தியசாலைக்கு
## ரூ.100 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

மத்திய சுகாதார அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு சுமார் 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியின் ஊடாக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கான 500 KW வலுவுடைய மின்பிறப்பாக்கி பெற்றுக் ▷19

## பிரபாகரனின் சீற்றத்தைக் கண்டு ▪▪ கமராவை கீழே போட்டேன் ▪▪
### இந்தியா ருடே ஆசிரியர்





(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தானே முதன் முதலில் படம் பிடித்ததாகவும் பிரபாகரனின் முகத்தில் ஏற்பட்ட சீற்றத் ▷19

## திருட்டுத்தனமுள்ள மோசடியான அரசியலை நிறுத்துவோம்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(களுத்துறை)

திருட்டுத்தனமுள்ள மோசடியான அரசியல் கலாசாரத்தை நிறுத்துவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

2024 ஜனாதிபதித் தேர்த ▷19

### 25 பயணிகளுடன்
## நாகப்பட்டினம் நோக்கி பயணமானது ‘சிவகங்கை’

(யாழ்ப்பாணம்)

சிவகங்கை பயணிகள் கப்பலானது நேற்றையதினம் காங்கேசன்துறையில் இருந்து நாகப்பட்டினம் நோக்கித் தனது பயணத்தைத் தொடர்ந்தது.

நேற்றுக் காலை 10.45 மணிக்கு காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்து “சிவ கங்கை” கப்பல் 25 பயணிகளுடன் நாகப்பட்டினம் நோக்கிப் பயணமா ▷19

## எமது அரசாங்கத்தில் அத்தியாவசிய பொருட்களுக்கான வரி நீக்கப்படும்
### ஜே.வி.பி தலைவர் அநுர



(தங்காலை)

எதிர்கால தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது முதல் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மருந்துகள், பாடசாலைப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் மீதான வற்வரியை நீக்கும் என கட்சியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நடைபெற்ற பேரணி ▷19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெண்காட்டில் இன்று தேர்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.(ம)


# தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹார்ட்வெயர் நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை.

- விற்பனையாளர்
- Welding வேலை தெரிந்தவர்

தொடர்புகளுக்கு:

021 228 3663, 076 000 4903

(1002)



# வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஹோட்டல் (Restaurant) ஒன்றிற்கு காசாளர், Management Trainees, Receptionist, கொத்து, சைனிஸ் உணவுகள் தயாரிப்பவர்கள் மற்றும் சமையல் உதவியாளர்கள் தேவை.

(1728)

தொடர்புகளுக்கு:-

077 201 7824, 021 222 0330


# கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உப செயலாளர் **திரு. இ. சந்திரகுமார்** அவர்களின் துணைவியார்

அமரர்

**திருமதி கயல்விழி சந்திரகுமார்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், இல்லப் பிள்ளைகள், பணியாளர்கள்.**

(C-1005)

## 'திருப்புகழ் மாமணி' விருது வழங்கி கௌரவிப்பு



(மண்டைதீவு)

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி ஞானாம்பிகை இராசலிங்கம் அவர்களுக்கு கனடாவிலுள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் "திருப்புகழ் மாமணி" எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

இவ் விருது வழங்கப்பட்டதை யொட்டிய கௌரவிப்பு நிகழ்வு இன்று (18) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மண்டைதீவு 6ஆம் வட்டாரத்திலுள்ள திருமதி ஞானாம்பிகை இராசலிங்கம் அவர்களின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது. (ம)

## தமிழ்...

தியத் தூதுவர் மேற்படி கேள்வியைத் தொடுத்தார்.

அத்துடன் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பிலும், அது குறித்து தமிழ் மக்களின் நிலைப்பாடு பற்றியும் இந்தியத் தூதுவர் வினவினார்.

இதன் போது நாம் பொதுவான கருத்துக்களைத் தெரிவித்தோம் என்று சந்திப்பில் கலந்துகொண்ட தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை பிரதான வேட்பாளர்களின் தமிழ் மக்கள் தொடர்பான உறுதிமொழிகள் குறித்தும் தம்மிடம் இந்தியத் தூதுவர் கேட்டறிந்தார் என்றும் மேற்படி சந்திப்பில் கலந்துகொண்ட தமிழரசுக் கட்சியின் எம்.பிக்கள் குறிப்பிட்டனர். (ம-7)


யாழ்ப்பாணம், நெல்லியடி, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியாவிலும்.....

# IELTS Academic / General Training

- மாணவர்கள் 6.5 band Score பெறுவதற்கு 100% உத்தரவாதம்.

திருமணம் முடித்து Family வீசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

# IELTS LIFE SKILLS A1

UK Qualification

Spoken Diploma in **English**

ஜேர்மன், சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு Spouse, Work, Student விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு

**DEUTSCH**

பிரான்ஸ் மொழிப் பாடநெறி **FRENCH** நெதர்லாந்து மொழிப் பாடநெறி **DUTCH**

(258)

BRITISH COLLEGE of Education

More information 0777- 695605

23, Kachcherinallur Rd, Jaffna. Tel : 021-4927113

Nelliyady. Tel : 021-7284200 Vavuniya. Tel : 024 - 4930041

Kilinochchi. Tel : 021-4927114 Puthukkudiyiruppu. Tel : 01173-01173

Trincomalee. Tel : 011- 4809245 Mullaithivu. Tel : 021- 7284344

IDP - IELTS, IELTS UKVI பரீட்சை நிலையம்.


# நல்லை மங்கையர்க்கரசியின்

## விழிநீர் அஞ்சலி

எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியை திருமதி **தங்கராணி கிருபானந்தா** அவர்களின் அன்பு மாமியார்

**கிருஷ்ணசாமி பவானியம்மா**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது விழிநீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.**

(C-1004)


ஓம் சாய் ராம்





# காணி விற்பனைக்கு

- யாழ்ப்பாணம் காரைநகர் மற்றும் நவாலி வீதிக்குச் செல்லும் சந்தியில் யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று கிலோ மீற்றர் (3Km) தூரத்தில் அமைந்துள்ளது.
- பிரதான காரைநகர் வீதி முகப்புடன் 78 (எழுபத்தெட்டு) பரப்புக் காணி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.
- பிரதான பாதையுடன் முன்பக்கம் 11 (பதினொரு) பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
- பின் பக்கம் பாதையுடன் தேவையான அளவு காணி பிரித்துக் கொடுக்கப்படும்.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு உகந்த இடம்.

(262)

பார்வையிடும் நேரம்:– காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:- ஓம் சாய் ராம்

077 676 3409

074 120 5961



உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

DHL MoneyGram money transfer Ria WESTERN UNION WU

உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பிய பணத்தினை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

(C-1007)

SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

No.303, K.K.S Road, Jaffna. E-mail : srimurugan303@gmail.com

E-mail : srimurugan09@gmail.com TEL : 076 315 6470


# யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)

## பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2024

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு கல்லூரி பேச் மண்டபத்தில் நடைபெறவுள்ளதை அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைவதோடு அனைத்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன். தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கான வேட்புமனுக்களும், பிரேரணைகளும் 02.09.2024 திங்கட்கிழமை பி.ப 4.00 மணிக்கு முன்பாக கீழ்க்காணும் முகவரியில் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கான வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றதும் 04.09.2024 புதன்கிழமை நடைபெறவிருக்கும் நிர்வாக சபைக்கூட்டத்தில் ஆராயப்பட்டபின் பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு விடப்படும்.

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். (1727)

C.P.M வீதி,
[illegible] தெற்கு,
மானிப்பாய்.

திரு.சி.சிவச்செல்வன்,
செயலாளர்,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி ப.மா.ச


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கவே தேர்தல்

## "இயலும் ஸ்ரீ லங்கா" உடன்படிக்கையின் போது ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காகவே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**




எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு இணங்கியுள்ள 34 அரசியல் கட்சிகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்த ஜனாதிபதி பாதிக்கப்பட்டிருந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது மீட்சி பெற்றுள்ளது சமுர்த்தி திட்டங்கள் 3 மடங்காக அதிகரித்துள்ளது. அத்துடன் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதனம் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சகல மக்களையும் இணைத்துக் கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதே தனது இலக்கு எனவும் தெரிவித்துள்ளார். (நி)

# முறையற்ற விதத்தில் ரணில் தேர்தல் பிரசாரம்

## அநுர சாடல்



(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதி அரச அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டி மல்வத்து பீட மகா நாயக்க தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், நாட்டில் ஊழல் மோசடி இடம்பெற்றமை தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் தம்மிடம் உள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களே, ஜனாதிபதியின் ஆலோசகர்களாகவும் ஆளுநர்களாகவும் உள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# பூண்டுலோயாவில் பாரிய தீ விபத்து 25 லயன் வீடுகள் தீக்கிரை!



(ஹற்றன்)

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீன் லோவர் தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக 25 லயன் வீடுகள் தீக்கரையாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இத் தீவிபத்தினால் 25 வீடுகளைச் சேர்ந்த 86 பேர் நிர்கதிக்கு உள்ளாகியுள்ளனர் எனவும், அவர்கள் தற்போது ஆலய மண்டபம் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 43,000 ஏக்கர் விவசாய நிலம் திருகோணமலையில் அபகரிப்பு

## குகதாசன் எம்.பி சுட்டிக்காட்டு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 43 ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகள் எல்லையிடப்பட்டு அபகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடம் பேசிய போது உரிய அமைச்சர்களுடன் கதைத்து தீர்வை பெற்றுத்தருவதாக தெரிவித்ததாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை - புல்மோட்டை பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்களுடனான நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (நி)

# புத்தளத்தில் மினி சூறாவளி

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் பல பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு மழையுடனான மினி சூறாவளி காற்றினால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் பொதுக்கட்டடங்களின் கூரைகளும் சேதமடைந்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலையினையடுத்து நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில் திடீரென இடியுடன் கடும் மழை பெய்ததுடன் மினி சூறாவளி காற்றும் வீசியுள்ளது.

அதேவேளை, இடியுடன் கூடிய கடும் மழை காரணமாக புத்தளத்தில் அனைத்து பகுதிகளிலும் மின்சாரமும் துண்டிக்கப் பட்டிருந்தது.

மினி சூறாவளி காற்று காரணமாக பாலாவி - கற்பிட்டி பிரதான வீதியில் இருந்த பல மரங்கள் முறிந்து வீழ்ந்தன. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிரிக்கெட் போட்டிகளில் இருந்து நிரோஷன் டிக்வெல்ல இடைநிறுத்தம்




ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கிரிக்கெட் வீரர் நிரோஷன் டிக்வெல்ல அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகள் இடம்பெறும் வேளையில் அவர் பங்குபற்றும் போட்டிகள் கால வரையறையின்றி இடை நிறுத்தப்படும் என இலங்கை கிரிக்கெட்டின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# 2025 ஐ.பி.எல் தொடரில் எம்.எஸ்.டோனி?

## உற்சாகத்தில் ரசிகர்கள்







சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று 5 ஆண்டுகள் ஆன வீரரை அன் கேப்ட் பிளேயர் ஆக அணியில் தக்க வைக்கலாம் என்ற விதிமுறை 2021 வரை ஐ.பி.எல் இல் இருந்து வந்தது. எதிர்வரும் ஐ.பி.எல் ஏலத்தை ஒட்டி, அந்த விதியை மீண்டும் அமுலுக்கு கொண்டு வர, ஐ.பி.எல் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், எம். எஸ். டோனி அடுத்தாண்டு ஐ.பி.எல் தொடரில் விளையாட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.பி.எல் அணி உரிமையாளர்கள் கூட்டத்தில் இந்த விதிமுறையை மீண்டும் கொண்டு வர வேண்டுமென சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் கோரிக்கை வைத்ததாக சொல்லப்பட்டது.

இந்நிலையில் அப்படி எந்த கோரிக்கையும் நாங்கள் வைக்கவில்லை என்றும் அதே சமயம் அன் கேப்ட் பிளேயர் விதி மீண்டும் கொண்டு வரப்பட வாய்ப்பு உள்ளதாக பிசிசிஐ தெரிவித்தது என்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் சி.இ.ஓ.காசி விஸ்வநாதன் தெரிவித்தார். (நி)

# முல்லைத்தீவில் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டி



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து வயது பிரிவு ஆண், பெண் இருபாலருக்குமான மாபெரும் மரதனோட்ட போட்டி நேற்று முன்தினம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

காலை 6.30 மணியளவில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி முன்பாக முல்லைத்தீவு மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் சி.குண பாலனினால் கொடி அசைத்து ஆரம் பித்து வைக்கப்பட்டது.

ஆண்களுக்கான மரதனோட்டம் 24 கி.மீ கொண்டதாக அமைந்ததுடன் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியின் முன்பாக ஆரம்பமாகி குமுழமுனை மகாவித்தியாலயம் முன் பாக நிறைவடைந்தது.

பெண்களுக்கான மரதனோட்டமானது 16 கி.மீ கொண்டதாக அமைந்ததுடன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகி குமுழமுனை மகா வித்தியாலயத்திற்கு முன்பாக நிறை வடைந்தது.

ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தினை முத்தயன்கட்டு பிர தேசத் தினை சேர்ந்த விதுசனும் பெண்கள் பிரிவில் முதலாம் இடத் தினை உடையார்கட்டு பிரதேசத் தினை சேர்ந்த கேமாவும் பெற்றுக் கொண்டனர்.


இந்த மரதனோட்டப் போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் பங்கு பற்றியிருந்தனர். (நி.350)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 160 | 100-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 150 | 300 | 200 | 320 |
| தக்காளி | 250 | 280 | 300 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 120-140 | 200 |
| கோவா | 350 | 350 | 300 | 300 | 400 |
| கரட் | 300 | 350 | 380 | 350 | 360 |
| பூசணி | 160 | 160 | 140 | 120 | 120 |
| புடோல் | 80 | 150 | 150 | 140 | 160 |
| வாழைக்காய் | 300 | 280 | 250 | 250-300 | 300 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 250-400 | 200-400 | 250 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | 220 | 240 |
| பாகற்காய் | 300 | 350 | 400 | 300-350 | 320 |
| வெண்டக்காய் | 150 | 120 | 120 | 200-250 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 150 | 150 | 250 |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 350 | 350 |
| பீற்றூட் | 200 | 200 | 300 | 250 | 250 |
| கறிமிளகாய் | 500 | 800 | 700 | 350 | 800 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 180 | 80-120 | 150 |
| போஞ்சி | 600 | 600 | 500 | 400 | 600 |
| கத்தரி தம்புள்ள | 160 | 100 | 180 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 50 | 50 | 80 |
| தேசிக்காய் | 400 | 550 | 500 | 300-350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 60-100 | 60-120 | 80-130 |
| இராசவள்ளி | -- | -- | 650 | 670 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 250 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 140 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 70 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவள்ளுவர் சிலை திறந்து வைப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயத்தில் திருவள்ளுவர் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திருவள்ளுவர் சிலையை திரை நீக்கம் செய்து வைத்தார். இந் நிகழ்வில் கல்வி அதி காரிகள், பாடசாலையின் அதிபர், விளையாட்டு அலுவலர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (நி-350)




## சட்டவிரோத மணல் கடத்தல் 4 டிப்பர் சாரதிகள் கைது



(தருமபுரம்)

அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் பல்வேறு பகுதிகளில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு டிப்பர் களும் அதன் சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தக வலுக்கு அமைவாக நேற்று முன் தினம் இடம் பெற்ற வீதிச்சோதனையின்மூலம்கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடையப் பொருட்கள் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)



கொமர்ஷல் வங்கி மானிப்பாய் கிளையில் புலமைப் பரிசில் பரீ ட்சையில் சித்தியடைந்த மாணவர்க ளுக் கான கௌரவிப்பு அண்மையில் நடை பெற்றது. வங்கி முகா மையாளர் திருமதி. த. கஜரூபன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் அ. ஜெயபாலன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். இந் நிகழ்வில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தும் குரங்கம்மை தயார் நிலையில் இலங்கை!

(கொழும்பு)

**ஆபிரிக்க நாடுகளில் பரவிய குரங்கம்மை சர்வதேச அளவில் பரவக்கூடிய ஒரு பொதுச் சுகாதாரப் பிரச்சினை என விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

ஆபிரிக்க நாடுகளில் கிட்டத்தட்ட 15ஆயிரம் பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் மற்றும் கடந்த ஆண்டில் கிட்டத்தட்ட அறுநூறு பேர் இறந்துள்ளனர்.

மேலும் குரங்கம்மை எனப்படும் நோய் மனிதர்களுக்கு வைரஸ் குழுவால் ஏற்படும் நோயாகும். பின்னர் முதலில் குரங்குகள் மற்றும் அதைச் சார்ந்த விலங்குகளால் இந் நோய் உண்டாகி, அந்தந்த பகுதிகளில் வாழும் மக்களுக்கு இந்நோய் பரவிய பின், இந் நோய் உள்ளவர்களிடம் இருந்து மற்றவர்களுக்கு நேரடியாக நெருங்கிப் பழகுவதால் நோய் பரவுவது கண்டறியப் பட்டுள்ளது.

இந்த வைரஸின் இரண்டு முக்கிய விகாரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இப்போது உலக சுகாதார நிறுவனம் இந்த நோயை உலகளாவிய அவசரநிலையாக அறிவித்துள்ளதால், இந்த அவசர நிலைக்கு முன்கூட்டியே தயாராக வேண்டியது நமது நாட்டின் சுகாதார அமைச்சகத்தின் பொறுப்பாகும். கோவிட் -19 இன் நிலை குறித்த எச்சரிக்கைகளின் தொடக்கத்தில், நம் நாட்டின் சுகாதார அதிகாரிகள் இந்த சூழ்நிலையை புறக்கணித்ததால் ஏற்படும் சேதங்களை நாம் அறிவோம்.

கடந்த காலங்களில் நமது நாட்டின் சுகாதார அமைப்பில் கடுமையான சரிவுகள் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம். கடந்த காலத்தில் நமது நாட்டின் சுகாதார அமைப்பில் ஏற்பட்டிருக்க வேண்டிய சாதகமான மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. தீவிர சிகிச்சை பிரிவு வசதிகள், படுக்கை வசதிகள் மேம்படுத்தப்படவில்லை.

இந்த குரங்கம்மை நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கு சோதனை மிகவும் முக்கிய மானது.

நோய் நாட்டிற்குள் நுழையக்கூடிய மையங்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டிய பொறுப்பு சுகாதார அமைச்சகத்திற்கு உள்ளது. அதே போல் நம்பகமான சுகாதார செய்திகளை வெகுஜன ஊடகங்கள் மூலம் மக்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு உள்ளது எனத் தெரிவித்தார். (நி)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற் சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணை யுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு, இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை கிழவன்காடு கலாமன்றம் யாழ்.கிளை வழங்கும் மல்லாரியுடன் திருபுகழ் இடம் பெறும்.

இதில் பாட்டு-பு.கோபி சாந், வயலின்-சு.நிறஞ்சலா, மிருதங்கம் ந.தேனுசாந், பி. பிரவீன், சோ.யதுர்ஷன், நெறியாள்கை-சி.துரைராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

7.15-8.05 மணி வரை இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு-அழகேசன் அமிர் தலோஜனன், அழகேசன் சிந்துஜன், வயலின்-கா. குகபரன், மிருதங்கம்- க.ஜதன், கடம்- உ.ரவிசங்கர், கஞ்சிரா-ந. சிவசுந்தரசர்மா, முகர் சிங்-சி.செந்தூரன் ஆகியோர் நிகழ்த் தவுள்ளனர். (நி)

## நல்லூரான் திருவடிக்கு... இன்று 10 ஆம் நாள் திருவிழா



## எம் நெஞ்சத்தில் நிறைந்தாய்

மஞ்சத்தில் உலாவருவாய்-வேலனே
(இனிய) பொன் மாலை வேளையிலே-முருகனே
இரு மாதர்கள் புடை சூழ ஆடி வருவாய்
எம் நெஞ்சத்தில் நீ நிறைந்தாய் தேவனே
நாற்புற வீதியில் ஒளி வெள்ளம்
நாதம் தவில் என இசை மழை
பொழிய அலங்கார ரூபனே கந்தனே
ஆவலுடன் நாம் பார்த்திருப்போம்
அரோகரா ஒலியில் திளைத்திடுவோம்
அனுதினம் உன்னைப் போற்றிடுவோம்
என்றும் எம் நெஞ்சத்தில்
நீ நிறைந்தாய் முருகனே

சி.கௌரி

## நல்லைக் கந்தவேளே!

சித்திக்கு வித்தான சித்தனே முத்தனே
தெள்ளுதமி ளானபொருளே
எத்திக்கும் தித்திக்கு மெழிலான வித்தகர்
இறைவனுக் கிறையானவா
சத்தியுமை பாலனே சர்வவேஸ் வரன்குரு
சர்வமு முனதுமயமே
நித்தமு மெமையாளும் நேசனே வாசனே
நிறைநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

# இராசிபலன்

18.08.2024
ஆவணி 02, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பின்னிரவு 3.07 மணிவரை
உத்தராடம் முற்பகல் 10.08 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
நடேசர் அபிஷேகம், அமிர்தம்
சந்திராஷ்டமம் - ரோகினி, மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்**
உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, உற்சாகமான நாள.

**ரிஷபம்**
தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், ரோக பயமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் நிதானம் தேவை.

**கடகம்**
பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**
செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**
பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**
நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள்.

**தனுசு**
வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், புதிய பொருட்களை வாங்க முயற்சி செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**
ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு, சுற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**மீனம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

நியாயமான கோபத்தை வீணாக செலவளித்து விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 455
Viber 076 636 3378



# பேரம் பேசும் அரசியலை தவறவிடும் தமிழினம்

தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்டது. இலங்கை வரலாற்றில் சாதனை ஜனாதிபதித் தேர்தலாக இம் முறைத் தேர்தல் அமையப் போகிறது.

கட்டுப்பணம் செலுத்திய 40 பேரில் 39 பேர் கடந்த வியாழக்கிழமை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

39 ஜனாதிபதி வேட்பாளர்கள் என்பது மிக அதிகம் என்றாலும் ஒரு ஜனநாயக நாட்டில் எத்துனை ஜனநாயகம் மிளிர்கிறது என்பதையும் குறித்த செயற்பாடு கோடிட்டுக் காட்டுவதாய் அமைகிறது.

தமிழினத்துக்கு இம் முறைத் தேர்தல் மிக முக்கியமான தேர்தல் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆம், தமிழ் பொது வேட்பாளர் யார் என்ற ஆவல் தமிழினத்திடம் மிகத் தீவிரம் பெற்றிருந்தது.

அனைவரின் ஆவல் நிறைவு பெறுவதாய் தமிழ் பொது வேட்பாளர் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் என அறிவிக்கப்பட்டுள்ளது.

> **இலங்கை வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஜனாதிபதித் தேர்தலாக அமையும் இத் தேர்தலில் பேரம் பேசும் சக்தியாக தமிழினம் இல்லாது போவது, அரசியல் இயலாமையினையே காட்டி நிற்கிறது.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதனூடாக பல கட்ட பேச்சுக்கள் நடத்தப்பட்டு, பலர் குறித்த வேட்பாளர் பட்டியலில் இடப்பட்டு அதில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

ஆயினும் குறித்த தெரிவு தமிழ் மக்களின் ஒட்டுமொத்த தெரிவாக அமைந்ததா எனின் அது கேள்விக்குறியே.

ஏனெனில் குறித்த பொது வேட்பாளர் தொடர்பில் அனைத்து தமிழ் தரப்புகளும் உடன்பட்டிருக்கவில்லை என்பது மிகத் தெளிவாக தெரிந்த விடயம்.

இதில் மிக முக்கியமான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி பொது வேட்பாளர் தொடர்பில் மௌனமாய் இருப்பதற்குள் இருக்கின்ற யதார்த்தத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் இலங்கை வரலாற்றில் ஏலவே நடைபெற்ற தேர்தல்களில் மிக முக்கியம் வாய்ந்த தேர்தலாகவே அமையப் போகிறது.

இலங்கை வரலாற்றில் நடைபெறாத பல விடயங்கள் நடந்து முடிந்து, ஓய்ந்ததன் பின்னர் நடைபெறும் தேர்தல் இது.

நல்லாட்சிக்கு முடிவு கட்டி மீண்டும் ராஜபக்ஷக்களின் ஓங்கிய ஆட்சியாக மலர்ந்தது ராஜபக்ஷக்களின் ஆட்சி.

இனி இலங்கை வரலாற்றில் ஏறுமுகமே என இறுமாப்புடன் ஆட்சி புரிந்த ராஜபக்ஷக்கள் மக்களின் பரிபூரண எழுச்சியை கொஞ்சமும் கற்பனை செய்து பார்த்திருக்க மாட்டார்கள்.

அந்தளவிற்கு ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு எதிராக சிங்கள மக்கள் தொடர் போராட்டங்களை நடத்தி, பெரும் மக்கள் எழுச்சியின் உச்சமாய் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி வெளிநாட்டிற்கு தப்பிச் செல்லும் அளவில் நிலை இருந்தது.

அதன்பின் வீழ்ந்து கிடக்கும் நாட்டை யார் மீட்க வருவார் என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில் எவரும் எதிர்பாராதது போல ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப் பேற்றிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகும் போது ஐ.தே.க அதள பாதாளத்தில் இருந்ததை பலரும் மறந்து விடமாட்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்க கூட அப்போது ஐ.தே.க வின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் எனும் அந்தஸ்துடனேயே இருந்தார்.

யாரும் எதிர்பாராத விடயங்கள் நடந்து முடிந்ததன் பின்னர் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் என்பதானாலேயே எதிர்வரும் தேர்தல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் எனக் கூறக் கூடியதாக உள்ளது.

தேர்தலில் யாருக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் என்பதைக் கணிக்க முடியாத அளவிலேயே தற்போது நிலை இருகிறது.

ஆனாலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எப்படியாவது வென்று விட வேண்டும் எனும் முனைப்புடன் மிகத் தீவிரம் காட்டுவதையும் உணர முடிகிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான வாக்குகளை பெற்று வெற்றியின் விளிம்பில் இருந்தவர் சஜித் பிரேமதாஸ. ஆதலால் இம்முறை எப்படியாவது தான் ஜனாதிபதியாகி விடலாம் என்பதில் மிகுந்த நம்பிக்கை காட்டி வருகின்றார்.



இதற்கு இவரின் பேச்சுக்கள் மிகச் சான்றாக அமைந்துள்ளன.

வீழ்ந்து கிடந்த நாட்டை மீட்டெடுத்தவன் நான். அதனால் இந்த நாட்டு மக்கள் என்னையே மீண்டும் ஜனாதிபதியாக்குவார்கள் என்ற அபார நம்பிக்கையுடன் செயற்படுகிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஊழலுக்கு எதிரான ஆட்சியாய் எமது ஆட்சி அமையும். இலங்கையின் இளைஞர் படை எம்முடன் இருக்கிறது என நம்பிக்கையுடன் இருக்கிறார் அநுரகுமாா திசாநாயக்க.

நிலை இவ்வாறு இருக்கையில் தமிழ் பொது வேட்பாளரின் தாக்கம் எப்படியாக அமையும் என்பதையும் நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

பொது வேட்பாளர் என்பதை சிங்கள தேசம் வேறு மாதிரியாகப் பார்க்கும் நிலை உண்டாயினும், பொது வேட்பாளர் மீதான குவியம் தமிழ் மக்களிடம் இருந்து விலகுமாக இருந்தால் அதன் தாக்கம் தெற்கைவிட வடக்கு, கிழக்கிற்கே அதிகம்.

தமிழினத்தின் ஒற்றுமை இவ்வளவுதானா என்கின்ற கீழ்மைத்தன பார்வைக்கு தமிழினம் முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

உலக நாடுகளாலே உன்னிப்பாக கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தரப்பு பேரம் பேசும் அரசியல் தளத்தில் இருந்து விடுபட்டு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியிருப்பது சரியான ராஜதந்திரமா என்பதையும் நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

ஏனெனில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைவரும் மக்களின் ஆணையினால் ஏலவே ஜனாதிபதி பதவியில் இருக்காத புதியவர்களே.

இவ்வாறான நிலையில் தமிழர் தரப்பு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தி விட்டு பின்னர் எந்த முகத்தை வைத்துக் கொண்டு பதவியேற்கும் புதிய ஜனாதிபதியுடன் பேரம்பேச முடியும்?

ஏனென்றால் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாகும் வாய்ப்பு இல்லை என்பது எப்போதோ தெரிந்த முடிவு.

இவ்வாறான நிலையில் பொது வேட்பாளரை ஆதரிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் என்பதற்குள் இருக்கும் முரணையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஜனாதிபதித் தேர்தலில் பேரம் பேசும் சக்தியாக தமிழினம் இராமல் இருப்பது சரியான முடிவா என்பதையும் இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டும்.

ஏனெனில் இம்முறை தவறவிட்டு விட்டு அடுத்த ஐந்து வருடங்கள் பேரம் பேசலுக்காகக் காத்திருப்பது தோற்றுப் போன ராஜதந்திரங்களில் ஒன்றே.

இதைப் புரிய வேண்டியவர்கள் புரிந்து நடக்க வேண்டும். அமைப்பு ரீதியாக நாம் செயற்படப் போகிறோம் என்பது சரி, ஆனால் அந்த முடிவு ஒட்டு மொத்த தமிழினத்தின் முடிவா என்பதையும் ஒன்றுக்கு நூறு முறை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனா ஒரு கேள்விக்குறி!

மக்கள்தொகை அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் நீண்ட காலமாக முதலிடத்தில் இருந்த சீனாவைப் பின்னுக்குத் தள்ளியது இந்தியா.

இந்நிலையில் சீனாவில் திருமணம் செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை சில ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் கணிசமாகச் சரிந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலை இன்னும் மோசமடையும் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தப் போக்கு அந்த நாட்டின் மக்கள் தொகையிலும் தாக்கத்தை விளைவித்திருக்கிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். குறிப்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக குறிப்பிடத்தகுந்த அளவில் குறைந்துவரும் மக்கள்தொகையை மீண்டும் உயர்த்துவதற்காகப் போராடிவரும் நாட்டின் கொள்கை வகுப்பாளர்களை இது அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

திருமண வயதில் ஆண்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது, அதேசமயம் திருமண வயதில் இருக்கும் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பது, திருமணத்திற்கான செலவுகள் அதிகரித்திருப்பது மற்றும் மாறிவரும் திருமணம் சார்ந்த மனோபாவங்கள் போன்றவை, சீனாவில் திருமண விகிதம் குறைந்ததற்கான முக்கியமான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

சீனாவில், இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மொத்தம் 34.3 லட்சம் தம்பதிகள் திருமணம் செய்து கொண்டனர். இது, கடந்த ஆண்டு இதே காலத்தைவிட 4.98 லட்சம் குறைவு எனத் தரவுகள் தெரிவிக்கின்றன.

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடாகக் கருதப்படும் சீனாவில், பொருளாதார உயர்வு மிகவும் மெதுவாக நிகழ்ந்து வருவது அங்குள்ள சீன இளைஞர்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

வேலைவாய்ப்புகள் அதிகம் இல்லாமல் இருப்பது மற்றும் எதிர்காலம் குறித்த அச்சம் ஆகியவற்றால் சீன இளைஞர்களில் பலர் தனியாக இருப்பதையோ, திருமணத்தைத் தள்ளிப் போடுவதையோ விரும்புகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

இன்று நேற்றல்ல, 2014ஆம் ஆண்டு முதலே சீனாவில் திருமண விகிதம் குறைந்து வருகிறது என்றே ஆய்வுகள் கூறுகின்றன. கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டில் திருமணங்கள் நடைபெறும் எண்ணிக்கை சற்று அதிகரித்து இருந்தாலும், பழையபடி குறைந்திருப்பதாக வல்லுநர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக, 2024ஆம் ஆண்டில் திருமண விகிதம் மிகக் குறைவாக இருக்கும் என்று சீனாவைச் சேர்ந்த மக்கள்தொகை நிபுணர் ஹே யாஃபு தெரிவித்துள்ளார்.

"குழந்தை பெற்றுக்கொள்பவர்களுக்குத் தேவையான ஆதரவுக் கொள்கைகளையும் திட்டங்களையும் வரும்காலங்களில் வரையறுத்துச் செயற்படுத்தாவிட்டால், சீனாவில் திருமணங்களின் எண்ணிக்கை இன்னும் குறையும். இதன் காரணமாக குழந்தைப் பிறப்பின் விகிதமும் குறையும். அதன் பின்னர், இவை இரண்டையும் அதிகப்படுத்துவது மிகக் கடினம்" என்று அவர் கூறியிருக்கிறார்.


இந்தச் சூழலில், சீனாவின் சிவில் விவகாரப் பல்கலைக்கழகம் (Civil Affairs University) திருமணம் சார்ந்த தொழில்கள் மற்றும் கலாசார நிகழ்வுகளை வளர்ப்பதற்காக திருமணம் சார்ந்த இளங்கலை படிப்பு ஒன்றை சமீபத்தில் அறிமுகம் செய்துள்ளது.

மக்கள்தொகை குறைவு, பிறப்பு விகிதம் குறைவு எல்லாம் உலகின் பல நாடுகளிலும் பிரச்சினையாகி வரும் சூழலில், மக்கள்தொகையில் முன்னர் நம்பர் 1, தற்போது, நம்பர் 2 இடத்தில் இருக்கும் சீனாவில், திருமண விகித குறைவு என்பது எதிர்காலத்தில் என்ன மாதிரியான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்பது போகப்போகத்தான் தெரியும்.

எது எப்படியிருந்தாலும், இது மனித குலத்தின் எதிர்காலத்தை ஒரு கேள்வியில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது என்பது மட்டும் உண்மை!

# வரலாற்றில் இடம்பிடித்த தேர்தல்

இலங்கை வரலாற்றிலேயே அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதி தேர்தலாக 2024 ஆம் ஆண்டுக்கான தேர்தல் பதிவாகியுள்ளது. மிகுந்த பரபரப் புக்கு மத்தியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட அதிகளவான வேட்பாளர்கள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளார்கள்.



எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.



**ஜனாதிபதிவேட்பாளர்கள்**

இந்நிலையில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர். 1982ஆம் ஆண்டு இலங்கையில் முதன்முறையாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது 06 வேட்பாளர்களும் 1988 ஆம் ஆண்டு 3 வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.



அதன் பின்னர் 1994 ஆம் ஆண்டு 6 பேரும், 1999 ஆம் ஆண்டு 13 பேரும், 2005 ஆம் ஆண்டு 13 பேரும், 2010 ஆம் ஆண்டு 22 பேரும், 2015 ஆம் ஆண்டு19 பேரும் போட்டியிட்டனர்.



**தேர்தல்கள் ஆணைக்குழு**


ஒரு வேட்பாளர் அதிகரித்தால் செலவு மேலும் 200 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் என தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்திருந்தார். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியில் இருந்து போட்டி யிடும் வேட்பாளர் 50,000 ரூபா யும், சுயேட்சை வேட்பாளர் 75,000 ரூபாயும் கட்டுப்பணம் செலுத்த வேண்டும்.





1981 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் இந்த தொகை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் ஆலய வளாகத்தில் வீதி தடைகளை மீறி பிக்குகளின் வாகனம். இதெல்லாம் என்ன வியாசரே?

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**மனைவி தன் கணவனிடம் சொன்னால் உன்னை விட மற்றவன் சிறந்தவள் என்று. அதன் அர்த்தம் தான் என்ன வியாசரே?**

மனைவியை அடக்கி ஆழ்வது எப்படி என ஒரு புத்தகம் எழுதலாம் என நினைத்த கணவனுக்கு மனைவி அடித்த அடியில், மனைவியிடம் அடங்கிப்போவது எப்படி என்ற புத்தகத்தை எழுதிமுடித்து வெளியீடும் செய்து வைத்தார். உலகில் உள்ள எந்த கணவனாலும் வெல்ல முடியாத ஒருவர் என்றால் அது மனைவி மட்டுமே. இந்த உண்மை புரியாமல் மூஞ்சியை புண்ணாக் காமால் சமத்தாக நல்ல புருசனாக இருப்பது அனைத்திற்கும் நல்லது.

**இராஜேஸ் — அளவெட்டி**

**ஐ.நாவில் வீட்டோ உரிமையுடைய நாடுகள் எவை வியாசரே?**

சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளாக இருந்து வருகின்றன.

இரண்டாம் உலகப் போரின் வெற்றிக்கு இந்த நாடுகள் பாடுபட்டதனால் 1946 ஆம் ஆண்டு முதல் வீட்டோ சிறப்பு அதிகாரமுடைய நாடு களாக இந்த ஐந்து நாடுகளும் சிறப்புப் பெறு கின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் இதர உறுப்பு நாடுகள் எடுக்கும் முடிவுகள் வெற்றி பெற்று இருந்தாலும் வீட்டோ அதிகாரமுள்ள இந்த நாடுகளில், ஒன்று குறித்த தீர்மா னத்தை எதிர்க்குமாக இருந்தால் குறித்த தீர் மானம் தோல்வி அடையும். இது ஐ.நாவின் விசேட சட்ட வரைபு.

இலங்கைப் பிரச்சினை தோல்வியடைய காரணம் ஏன் என்பது இப்போது புரிகிறதா?

**சுதன் — குப்பிளான்**

**பொது வேட்பாளருக்கு தமிழரசுக்கட்சி தனது ஆதரவை தெரிவிக் குமா வியாசரே?**

பொதுவேட்பாளர் என்பது தமிழினத்தின் ஒற்றுமையை பறைசாற்றவும் தமிழினத் தின் வாக்குச்சிதறலைத் தடுக்கவுமே உரு வாக்கப்பட்டது.

ஆனால் அந்த நடவடிக்கை அனைத்து தரப்புக்களையும் உள்வாங்கியதா என்றால் இல்லை என்பதே முடிவு. தமிழ் பொது வேட்பாளர் வடக்கு- கிழக்கில் அதி கூடிய வாக்குகளை பெறாமல் போனால் அதன் விளைவு இலங்கையிலும் உலக அரங்கி லும் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை எவரேனும் யோசிக்கின்றார் களா? இல்லையே. சுயநலம் நிறைந்த தமிழ் அரசியல் தளத்தில் யாரோ ஓரிருவ ருக்கு தேவையான ஒன்றை திணிக்க முற்பட்டு விட்டார்கள். இந்த விஷப்பரீட்சை யில் சிக்கி சின்னாபின்னமாப் போவது தமிழினம் மாத்திரமே.





**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**

**076 097 3126**

**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மகாலட்சுமி — கொக்குவில்**


**புராண காலங்களில் அதிசயம் செய்த கடவுள்கள் கலியுகத்தில் அமைதியாய் இருப்பது ஏன்?**

கடவுளிடம் பூரண சரணாகதி அடைதல் என் பது இப்போது இல்லை என்றாகி விட்டது. எப்படி இறைவன் அதிசயம் நிகழ்த்துவான் சொல்லுங்கள்.

கலியுக வாழ்க்கை கோவில்கள் எல்லாம் பக்தி பூர்வம் அற்றுக்கிடக்கிறது.வெறும் கேளிக்கையும் வேடிக்கையும் நிறைந்த மைதானமாக கொட்டிக் கிடக்கின்றன கோவில்கள்.

எரியும் மின்குமிழ்கள், ஒலிக்கும் மேள , தாளங்கள், பார்ப்பவர்களைக் கவரும் ஆப ரணங்கள் தேவலோகத்தில் நிற்பது போன்ற பிரமை. இவை கடவுளிற்கு உரித்தானவை என்றால் அது தான் இல்லை. ஒரு தனி மனிதன் அல்லது குழுவின் பவரை காட்ட கடவுளை பலிக்கடா ஆக்குகின்றார்கள். நிலை இப்படி இருக்கும் போது கடவுள் வந்து அதிசயம் செய்ய அவனுக்கு பைத்தியமா?

போங்கடா, நீங்களே அடித்து, நீங்களே செத்து தொலைலங்கடா என்று அமைதியாகி விடுகிறான் இறைவன்.



ஐ.நாவில் வீட்டோ உரிமையுடைய நாடுகள் எவை வியாசரே?

**கனேஸ் — பருத்தித்துறை**

**நல்லூர் ஆலய வளாகத்தில் வீதி தடைகளை மீறி பிக்குகளின் வாகனம். இதெல்லாம் என்ன வியாசரே?**

இது சிங்கள பௌத்த நாடு. இங்கு ஒரு பௌத்த துறவிக்கு எங்கும் சென்று வர உரிமை உண்டு என்பதை குறித்த விடயம் தெளிவாக சுட்டி நிற்கின்றது.

தமிழினம் தோற்றுப் போன இனமானதன் பின்னர் இப்படிப்பட்ட பல விடயங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

தேவர்களுக்கு கொடுமை செய்த சூரனை தனது வேல் கொண்டு வதம் செய்து சேவ லும் மயிலும் ஆக்கியவன் முருகன். என்ன செய்வது முருகனும் சில இடங் களில் அடக்கி வாசிக்கிறானோ என்று எண்ணத் தோன்றுகிறது. சரி பொறுத்தி ருந்து பார்ப்போம் நிலை எப்படி ஆகப் போகின்றது என்பதை.

**மதுவன் — மீசாலை**

**தமிழ் தலைவர்கள் உருவாகியது தமிழ் மக்களின் சாபக்கேடா வியாசரே?**

தந்தை செல்வநாயகத்திற்குப்பின்னர் தமிழினத்தின் உரிமையைப் பெற்றுத்தரு வதிலும் அவர்களின் அரசியல் அபிலாசை களை வென்றெடுப்பதிலும் அர்ப்பணிப்பு மிக்க தலைவர் ஒருவர் உருவாகவில்லை என்பது தான் வேதனையான உண்மை.

தற்போதைய தலைவர்களிடத்தே சுயநல அரசியல் பாங்கே அதிகமாக இருக்கின்றன. பாராளுமன்றத்திலோ அல்லது பொது வெளியிலோ அவர்கள் தமிழினம் சார்ந்து ஒரு விடயத்தை பேசினால் அந்த பேச்சில் 99.99 விகிதம் தமது சுய நல அரசியலே புதைந்து கிடக்கும்.

இப்படிப்பட்டவர்கள் எப்படி தமிழினத்தின் காவலராவார்கள்?

இவர்கள் எப்படி எமது உரிமைகளை பெற் றுத் தருவார்கள்? இவர்களை நம்பி எப்படி தமிழினம் இவர்களுக்கு பின் நிற்கும் சொல்லுங்கள்?

**விஜயகுமார் — நெல்லியடி**

**ஆதாம் -ஏவாளிற்குப் பிறகா உலகில் பாவம் பிறந்தது வியாசரே?**

அறம் செய்ய விரும்பு என்று ஔவை பாட்டி பாடியிருக்கின்றார் என்றால் ஔவை பாட்டி வாழ்ந்த காலத்திலும் அறம் செய்ய விரும்பாத கஞ்சன்கள் வாழ்ந்தி ருக்கின்றார்கள் என்று தானே பொருள்.

ஒரு அப்பிள் பழத்தை பிடுங்கியது தான் பிரச்சினை என்று இல்லை. அந்த அப்பிள் பழம் பிரச்சினை உருவாக கார ணமாகி விட்டது. அவ்வளவு தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் மாதுமை அம்பாளின் பவுண் தாலி காணாமல் போயுள்ளதை அறிந்து மிகுந்த வேதனையடைந்துள்ளோம்.

சோழர் காலத்தில் செய்யப்பட்ட மாதுமையம்பாளின் பொற்றாலியில் முத்துக்களும் பவளங்களும் பதிக்கப்பட்டுள்ளன.

மிகப் பெறுமதி வாய்ந்த அந்தத் தாலியை கண்டுபிடிப்பதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் கிழக்கு மாகாண ஆளுநர் மேற்கொள்ள வேண்டும் என்றொரு தீர்மானத்தை ஆலடியில் நிறைவேற்றுவம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று குறித்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** அது சரி தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் எப்படிப் போகுது.

**கங்காணி:-** அதையேன் கேட்கிறியள். எங்கட தமிழினம் செய்த பாவவினை இன்னும் தீர்ந்ததாயில்லை. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் எல்லாரும் அரச காணிக்கு விண்ணப்பித்து ஏக்கர் கணக்கில காணி எடுத்திருக்கினமாம். அதிலும் மன்னாரில இருக்கிற அரச காணியில, கணிசமான ஏக்கர் முக்கியமான தமிழ் எம்பிக்கு கிடைச்சிருக்கிறதாகக் கேள்வி.

**சாத்திரியார்:-** அட சங்கதி அப்படியோ அப்ப பிறகென்னண்டு அவயள் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கிறது.

இவ்வாறு சாத்திரியார் கூற, ஆலடி மீண்டும் மௌனமாகியது. மௌனத்தைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில மகப்பேற்றுக்கான கட்டடம் இல்லாதிருப்பதாக மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபவா வேதனையோடு கூறியுள்ளார்.

**கங்காணி:-** என்ன? விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு கடந்த 15 ஆம் திகதி நல்லைக்குமரன் 32 ஆவது மலரை வெளி யிட்டு வைத்ததோடு யாழ் விருதை மகப் பேற்று வைத்திய நிபுணர் சரவணபவா அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தது.

இந்த நிகழ்வில் பொருத்தமான ஒருவருக்கு யாழ் விருது வழங்கப் பட்டுள்ளதாக அங்கு உரையாற்றிய அனைவரும் தெரிவித்திருந்தனர்.

யாழ் விருதைப் பெற்றுக் கொண்ட மருத்துவர் சரவணபவ ஒரு சிறப்பான ஏற்புரையை ஆற்றியிருந்தார்.

அவர் ஆற்றிய உரையில; யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில மகப்பேற்றுக்கான கட்டட வசதிகள் இல்லாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரியது. எங்கட யாழ்ப்பாண மருத்துவ வரலாற்றில மகப்பேற்று வைத்தியசாலைகள் தான் முதன்மை பெற்றிருந்தன.

இணுவில்,மானிப்பாய், புத்தூர் இப்படி தரமான மகப்பேற்று வைத்திய சாலைகள் இருந்தன.

தாய் சேய் நலன் என்பது மிகவும் முக்கியமானது. இருந்தும் எங்கட யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில மகப்பேற்றுக்கான கட்டட வசதி இல்லாத அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் எனக் கூறிய மருத்துவ நிபுணர், அங்கு ஒரு முக்கியமான கருத்தை முன்வைத்திருந்தார்.

இவ்வாறு கூறிய விதானையார் சற்று மௌனமாகிய போது, இடையில் குறுக்கிட்ட பண்டிதர்; விதானையார் மருத்துவர் சரவணபவா கூறின அந்த முக்கியமான கருத்தை சொல்லுங்களன் என்றார்.

**விதானையார்:-** இப்ப எங்கட வட மாகாணத்தில மருத்துவர்கள் தலை நிமிர்ந்து நிற்க முடியாத அளவில மருத்துவத் துறையைச் சாடிக் கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

ஒரு சிலரின் பொறுப்பற்ற செயல்கள் ஒட்டு மொத்த மருத்துவர்களையும் பாதித்துள்ளது.

இந்த இடத்தில தான் எனக்கு அறிவிக்கப்பட்ட யாழ் விருதைப் பெற்றுக் கொள்வது என்ற தீர்மானத்தை நான் எடுத்தேன்.

நாம் சிறந்த சேவையை வழங்கினால் அதற்கு மக்கள் நிச்சயம் மதிப்பளிப்பர். என்னைப் பொறுத்த வரை அண்மையில் நடந்த சம்பவங்கள் இறைசெயலாகக் கூட இருக்கலாம்.

ஏனென்றால் நாங்கள் எங்களைப் புடம் போடுவதற்கும் எங்களின் சேவையைச் சிறப்பாக வழங்குவதற்கும் இந்தச் சம்பவங்கள் வழி வகுக்கும் எனக் கூறிய மருத்துவர் சரவணபவா யாழ்.போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று நிலையத்திற்கான கட்டடத்தை நிர்மாணிக்க எங்கட பரோபகாரிகள் முன் வர வேண்டும் என்ற முக்கியமான கோரிக்கையையும் முன்வைத்துள்ளார்.



## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மகப்பேற்றுக்கான கட்டடம் தேவை

**வாத்தியார்:-** மருத்துவ நிபுணர் சரவணபவா கூறியது நூறுவீதம் உண்மை.

எங்கட மருத்துவத் துறை சார்ந்து முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் அர்ப்பணிப்போடு சேவை செய்த மருத்துவர்களையும் உளரீதியாகப் பாதித்துப் போட்டுது.

இனியும் நாங்கள் தொடர்ந்து கடும் விமர்சனங்களை முன்வைக்காமல், எங்கட மருத்துவ சேவை மீண்டும் உன்னதமாக இயங்குவதற்கான உதவிகளை எல்லோரும் சேர்ந்து வழங்க வேணும்.

அதிலும் குறிப்பாக யாழ்.போதனா வைத்திய சாலையில மகப்பேற்று நிலையத்தை அமைப்பதற்கு உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இருக்கிற எங்கட கொடையாளர்கள் முன் வர வேண்டும்.

மகப் பேற்று நிலையம் என்பது தாயினதும் சேயினதும் உயிரைக் காப்பாற்றும் இடம். எனவே மகப்பேற்று நிலையம் உச்சமான வசதி வாய்ப்புகளோட இயங்க வேணும். ஆகையால இதை ஒரு பெரும் திட்டமாக முன்னெடுக்க வேணும்.

**சிறாப்பர்:-** வாத்தியார் கூறியதை நானும் வழிமொழிகிறன்.

ஓர் ஆலயத்திற்குக் கோபுரம் அமைப்பதை விட, ஒரு மகப்பேற்று நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவது மிகுந்த புண்ணியமான காரியம். எனவே அந்தப் புண்ணியத்தை எங்கட கொடையாளர்கள் மற்றும் புலம் பெயர் தமிழ் உறவுகள் செய்தாக வேண்டும்.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



24 செங்கை ஆழியான்

இத்தாழ் கொத்தளங்கள் முருகைக்கற்களினால் கட்டப்பட்டு உட்புற ஒடுங்கிய பாதைகளைக் கொண்டனவாகவும் முருகைக்கற்களினால் மூடப்பட்ட கூரை கொண்டனவாகவும் உள்ளன.

இத்தாழ் கொத்தளங்களில் ஒவ்வொரு காவலரண் கூடுகள் உள்ளன. உயர் கொத்தளங்களில் முக்கோணத்தின் முனைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாக மூன்று காவலரண்கள் இருந்தன. ஆக மொத்தமாக 19 காவலரண் கூடுகள் கோட்டையில் இருந்தன. அகழி வெளிச்சுவரின் மத்தியில், முற்றவெளியோடு அமைந்த பாதுகாப்பற்ற தாழ்கொத்தளங்கள் எதிரிகளின் வருகையை முதலில் தடுக்கும் நிலைகளாகும். இத்தாழ்கொத்தளங்களினால் எதிரிபடைகளைத் தடுக்க முடியாவிடில் உயர் கொத்தளங்கள் அடுத்துச் செயற்படும். தாழ்கொத்தளங்கள் நில மட்டத்தோடு அமைந்தவை. உயர் கொத்தளங்கள் அகழிக்கு அப்பால் முப்பதடி உயரமான இடத்தில் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருப்பவையாகும். இவற்றை விட மதிலில் பத்தடிக்கு ஒரு பீரங்கி பொருத்தக் கூடிய இடைவெளி அமைக்கப்பட்டிருந்தது.

போர்த்துக்கேயரினாலும் ஒல்லாந்தராலும் கட்டப்பட்ட கோட்டைகள் உண்மையில் பலம் வாய்ந்தவை. பெரும்பாலான கோட்டைகள் முருகைக்கற்களால் உருவாக்கப்பட்டன. முருகைக்கற்களைத் தாம் விரும்பிய வடிவத்திற்குக் கற்தச்சர்களால் வெட்ட முடிந்தது. முருகைக்கற்கள் இலகுவில நொருங்கும் தன்மை அற்றவை, அழுத்த நெகிழ்ச்சி கொண்டவை, முருகைக்கற்களை சுவர் கற்களாக கன வடிவில் வெட்டுவது இலகுவாக இருந்தது. பின்னர் சுவர்களில் பொருத்தப்பட்டன.

இவர்களால் அமைக்கப்பட்ட கோட்டைகள் அனைத்தும் கடற்கரையோரங்களில் அமைந்திருந்தன. அல்லது பாதைக் கடவைகளில் அமைந்திருந்தன. யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறை ஹெமன்கீல் கோட்டை, காங்கேசன்துறைக் கோட்டை, வெற்றிலைக் கேணியிலிருந்த பாஸ் பைல் கோட்டை ஆகியன கடற்கரையோரங்களிலும், இயக்கச்சி பெஸ் சுட்டர் கோட்டை, ஆனையிறவுக் கோட்டை, பூநகரிக் கோட்டை என்பன பாதைக் கடவைகளிலும் அமைந்திருந்தன. இத்தகைய நிலைய முக்கியத்துவத்தினால் கடலிலிருந்தும் தரையிலிருந்தும் வரும் எதிரிகளின் தாக்குதல்களை எதிர்கொண்டு முறியடிப்பது எளிதாகவிருந்தது. யாழ்ப்பாணக் கோட்டை சுண்ணக் கற்களினாலும் முருகைக் கற்களினாலும் அடுக்கிக் கட்டப்பட்டது.

(தொடரும்...)




காலத்தின் பதிவு121

# கடல் புறா

## குடிப் பழக்கம்

இப்படிக் கடைகளுக்கு அழைத்துச் சென்று குடிக்கத் தூண்டிய இளைய பல்லவன் வலையில் மட்டும் விழாமல், பலவர்மன் லேசாக மது வகைகளை ருசி பார்த்ததன்றி இளையபல்லவனை மாத்திரம் அதிகமாகக் குடிக்கப் பழக்கினான். இளைய பல்லவனும் மெல்ல மெல்ல அந்தப் பழக்கத்தில் விழுந்து குடித்துத் தள்ளாடித் தள்ளாடித் தெருக்களில் நடப்பதை மக்கள் பார்த்தனர், மாலுமிகள் பார்த்தனர், கொள்ளையர் பார்த்தனர். பார்த்துக் கவலையும் கொண்டார்கள். எல்லோரையும் விட அதிக கவலை கொண்டாள் மஞ்சளழகி.

சுமார் பத்து நாட்களுக்கு முன்பு கடற்கரையில் தன்னைக் கைப்பிடித்து அழைத்து வந்து கொள்ளையரிடம் கொடுத்து, “இவளை நான் மணம் செய்துகொள்வதாகப் பலவர்மனிடம் கூறுங்கள்” என்று கூறிவிட்டுச் சென்ற தினத்திலிருந்து மஞ்சளழகி இளையபல்லவன் கண்களில் அதிகமாகப் படவில்லையென்றாலும் அவன் நடவடிக்கைகளை மட்டும் ஊக்கத்துடன் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். அவன் நகர மக்களுக்குத் தைரியமூட்டியது, கோட்டையைப் பாதுகாக்க ஏற்பாடுகளைச் செய்தது, அனைத்தையும் பார்த்துப் பார்த்து இத்தகைய சிறந்த வீரனை மணாளனாக அடையப்போகிறோமென்ற எண்ணத்தால் மனம் பூரிக்கவும் செய்தாள். இடையிடையே அவள் மனதில் ஒரு சந்தேகம் மட்டும் உதித்துக் கொண்டிருந்தது. இளையபல்லவன் தனக்குமுன் வேறொருத்தியிடம் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறானென்பது மட்டும் அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது. வெளிநாட்டு வர்த்தகரிடமிருந்து கிடைத்த வதந்தியிலிருந்து பாலூர்ப் பெருந்துறை விடயங்களை ஓரளவு பலவர்மனைப் போலவே அவளும் உணர்ந்திருந்ததால், அந்தப் பெண் கடாரத்து இளவரசியான காஞ்சனா தேவியாகவும் இருக்கலாம் என்ற சந்தேகம் அடிக்கடி அவள் மனத்தே எழுந்துகொண்டிருந்தது. ஆனால் அவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்துவிட்டதால், மணம் மட்டும் முடிந்து விட்டால் தான் அவனைத் தன்மீது அன்பு கொள்ளச் செய்யலாமென்ற நம்பிக்கையும் அவளுக்கிருந்தது. அந்த நம்பிக்கை ஊறிக்கிடந்த அவள் இதயத்துக்கு இளையபல்லவன் திடீரெனக் கற்றுக்கொண்ட குடிப்பழக்கம் பெரும் வேதனையைத் தந்தது. அந்தக் குடிப்பழக்கத்தைத் தந்தையும் அதிகமாக ஆதரிப்பதைக் கண்டு பெரும் சந்தேகமும் சஞ்சலமும் கொண்டாள் மஞ்சளழகி. வேண்டுமென்றே தந்தை இளையபல்லவனுக்குப் பெரும் குழியைப் பறிக்கிறார் என்பதையும் புரிந்துகொண்டதால் எல்லையற்ற கவலையும் பயமும் அடைந்து. அவரை எப்படி மீட்கலாமென்ற யோசனையிலும் இறங்கி, என்ன செய்வதென்று தெரியாமல் திணறினாள் அந்தப் பசும் பொன் நிறப் பைங்கிளி.


அதற்காக இளையபல்லவனைத் திருட்டுத்தனமாகச் சந்திக்க முயன்ற ஓரிரண்டு சமயங்களிலும் அவன் நிலை மிகக் கேவலமாகத் திரும்பியது. ஒவ்வொரு இரவு குடித்து விட்டுத் தள்ளாடித் தள்ளாடி மாளிகைக்குள் நுழைந்த இளையபல்லவனை உப்பரிகையிலிருந்து கண்ட மஞ்சளழகி அவனது அறைக் காவலரை வெளியே செல்லும்படி உத்தரவிட்டுத் தான் மட்டும் அறைவாயில் தனித்து நின்றாள். மெல்ல மெல்ல மாடிப் படிகளில் தள்ளாடி ஏறிவந்த இளையபல்லவன் அறை வாயிலில் நின்ற மஞ்சளழகியைச் சில விநாடிகள் மயங்கிய பார்வையுடன் பார்த்தான். “நீ.. நீ மனைவி...” என்று ஏதோ உளறி, தன் கையை நீட்டி விரலால் அவளைச் சுட்டியும் காட்டினான்.

மஞ்சளழகியின் வதனத்தில் வருத்தின் சாயை பூரணமாகப் படர்ந்திருந்து. அவள் கண்களில் நீர் திரண்டெழாவிட்டாலும் அது திரண்டெழுவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. செவ்விய அவள் அதரங்கள் மெல்லத் துடித்தன. “நீ... மனைவி... நான்.. கணவன்... உம்” என்று உளறிக் கொண்டே அவளை நெருக்கிய இளையபல்லவன் அவளை முரட்டுப்பிடியாகத் தன் கைகளால் பிடித்தான். அவளது வலிய உடலும் அவள்மீது சாய்ந்தது. செவ்வரி படர்ந்த மஞ்சளழகியின் கண்கள் குடிவெறிமிகுந்து நின்ற அவன் கண்களை ஊன்றிப் பார்த்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிகாரனின் ஒரு நாள் வாழ்க்கை



அதிகாலை மணிஓசை
அவன் காதில் கேட்கிறது
அடி வயிற்றில் பசி எடுக்க
அவன் கைகால் நடுங்கிறது
மது வழங்கும் வீடு
அவனை வரவேற்கிறது
சிறு சேவைகள் செய்த பின்னே
திண்ணை வா என்கிறது
ஊத்திட்ட மது அவன்
உடம்புதனில் புகுந்ததினால்
புதுத் தெம்பு வருகிறது
உடல் புளகாந்திரம் அடைகிறது
மது வீட்டார் வேலைகள்
வரிசையாய் நடக்கிறது

அவன் வீட்டு வேலைகளோ
முடங்கியே கிடக்கிறது
சாயங்காலம் ஆக அவன்
சாயலோ தெரியவில்லை
தனையன் கையில் சாய்ந்தபடி
சத்தமாய் இதைச் சொன்னான்
சத்தியமாய் இனி மதுவைக்
குடிக்க மாட்டேன் என்றான்
மகிழ்ந்திட்ட மகன் காதில்
மறுபடியும் சொன்னான்
இனி என்னால் ஏலாது
நாளைக்குத்தான் என்றான்.

துணவியூர் நடா

# இனிமை காணுமே

கவிதை எழுதக் கற்றவர்க்கு
காலம் தேவையா?-காலம்
கவலையோடு சேர மறுத்து
கனிவை நாட்டுமே-வாழ்வில்
எளிமை கண்டு வாழும் போது
இனிமை தோன்றுமே-என்றும்
அமைதியாக வாழ எண்ணின்
இனிமை தோன்றி நிறையுமே

இனிமையோடு வாழும் மனிதன்
துயரை விரட்டுவான் பின்பு
அடிபணிந்து போவதற்கு
வழிகள் இல்லையே-அன்பு
எளிமையான வாழ்வில் நிறைந்து
என்றும் நிலைக்குமே-இதயம்
காட்டும் வழியில் வாழ்வு என்றும்
இனிமை தேறுமே

அழகுதந்த இனிமை என்றும்
வாழ்வில் உயருமே-மனிதம்
மனிதமாக வாழ எண்ணின்
துயரை வெல்லுமே-வாழும்
வாழ்வில் என்றும் தாழ்விலாது
தன்னை உயர்த்துமே-உண்மை
தாழ்விலாத வாழ்வை எண்ணின்
இனிமை காணுமே

வளவை வளவன்

# ஆறாத காயங்கள்

ஓர் அடர்ந்த பிரியம்
கொடுத்த
ஆழ்ந்த காயத்தின் குருதியை
உலர வைப்பது என்பது
மிகப்பெரிய பிரார்த்தனை – அது
மிகவும் ரகசியமானதும் கூட..

உலர்ந்த குருதிக்கறையை
தடவிப்பார்க்கையில்
உண்டாகும் வலி
மிகத் தீவிரமானது – அது
வாழ்வை மிக நெருக்கமாக
உணரவைப்பதும் கூட..

உதிர்ந்த இலைகளை
ஒட்ட வைக்க முடியாமல்
உள்ளுக்குள் அழும் வேர்களின்
கண்ணீர்
எந்தக் கடலையும் சேர்வதில்லை..

புரண்டு படுக்கிற
காயங்களின் தியானத்தை
ஆறுதல் என்று வார்த்தைகளால்
கலைத்துவிடாதீர்கள்..

காயங்கள் ஆறுவதில்லை
உலர்ந்துவிடுகின்றன
அவ்வளவுதான்..

சங்கரி சிவகணேசன்

# மௌனத்தின் தேடல்- 729



## வயோதிப இளைஞன்

வயோதிபம் வந்தது
மன வலிமை வென்றது
பார்வை குன்றிவிட்டது மூக்குக் கண்ணாடி
விறகுக் குற்றிகளை வண்டி
சுமந்து வர நடத்திச் செல்கிறார்
வயோதிபம் கண்ட இளைஞர்
வயதல்ல, மனவலிமை தான்
வெற்றி தரும் ஐயா! தங்கள்
துணிவிற்கு எனது பாராட்டு

அபி- குவமாலிகா
சித்தங்கேணி.

## பசி தீர்க்கும் என் முயற்சி...

குடும்பத்தின் பசி தீர்ப்பதற்கான
என் முயற்சி
ஒரு நாளும் தோற்றதில்லை
வியர்வை வழிந்தோட
வண்டில் இழுப்பேன்...
சம்பளப்பணத்தைக் கொண்டு
வீட்டிற்கு ஓடுவேன்
அப்போது தான் என் வீட்டின்
அடுப்பெரியும்

சீதாராம், உடுவில்.

## வாழ்க்கைத் தத்துவம்

வாழ்க்கையை ஓட்டுவதற்காய்
நான் தினம் ஓடிக் கொண்டு
இருக்கிறேன்
வாழ்வின் முடிவிற்குள்
வசப்படும் நேரத்திலும்
என் குடும்பத்தின் பசி தீர்க்க
என் கால்கள்
ஓடிக் கொண்டு தான் இருக்கும்
ஓடும் வரை ஓடுவது தானே
வாழ்க்கை
என்ற மகா தத்துவம்
என் வாழ்வில் உண்மையாகிவிட்டது

உதிஸ்ரன்.

## முதுமையும் பொறுமையும்

நவீன மய மாற்றங்கள் நாளும்
காரியங்களைச் கச்சிதமாக்கினும்
இந்த வசதி வாய்ப்புக்கள் பலருக்கு
சொந்தமாவதில்லை யென்றும்
இங்கும் வாழ்வுச் சக்கரத்தைச் சீராக
தங்கு தடையின்றிச் சுற்ற வைக்க
முதுமையையும் பொருட்படுத்தாமல்
பொறுமையுடன்
உழைப்பதற்குக் காரணம்
இயந்திர சாதனங்களுடன் போட்டியிடும்
சுதந்திரக் காற்றை சுவாசிக்கவும்
இதனால் கை கொடுத்த வண்டியை
இவரால் கைவிட முடிவதில்லை

க.நாகராசா, புனாவில்.

# மௌனத்தின் தேடல்- 730




அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தன் கையே தனக்குதவி

வளமுடன் குடும்பத்தை வாழ வைக்க
வாலிப வயதில் உழைத்துக் கொடுத்து
சீரும் சிறப்பாக வாழ வைத்த என்னை
சின்னா பின்னமாக்கி விட்டார்களே
வயோதிப காலத்தில் வாழ்க்கை என்னும்
ஓடத்தை ஓட்டிச் செல்ல
ஒருமித்த மனத்துடன் நானும்
வண்டியிலே பாரம் ஏற்றி நானே இழுத்து
வீதி வீதியாய் வியாபாரம் செய்து
வருமானம் பெறும் என் வாழ்க்கையை
விதி என்பதா அல்லது சதி என்பதா?
தன் கையே தனக்குதவி என்பது போல
தன் மானத்துடன் வாழ வழி
அமைத்து விட்டேனே

ஆ. செல்வி திருநாவலூர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

பாடியவர் : டி எம் சௌந்தரராஜன்
இயற்றியவர் : கண்ணதாசன்
திரையிசை : எம் எஸ் விஸ்வனாதன்



சென்று வா மகனே சென்று வா
அறிவை வென்று வா மகனே வென்று வா
கன்று தாயை விட்டு சென்றபின்னும்
கன்று தாயை விட்டு சென்றபின்னும்
அது நின்ற பூமி தன்னை மறப்பதில்லை
சென்று வா மகனே சென்று வா
அறிவை வென்று வா மகனே வென்று வா

அறிவுலகம் உன்னை அழைக்கின்றது
ஏதும் அறியாஅதவன் என்றே நினைக்கின்றது
அர்ண்மனை வாசல் திறக்கின்றது
அரண்மனை வாசல் திறக்கின்றாது
அங்கே ஆணவம் புன்னகை புரிகின்றது

சென்று வா மகனே சென்று வா
அறிவை வென்று வா மகனே வென்று வா

உண்மையை சொல்வதற்கு படிப்பதற்கு
எல்லாம் உணர்ந்தவர் போல் நடிக்கும் நடிப்பெதற்கு
கண்கண்ட காட்சிகளுக்கு விளக்கெதற்கு – நெஞ்சில்
கள்ளமில்லாதவற்கு பயமெதற்கு

சென்று வா மகனே சென்று வா
அறிவை வென்று வா மகனே வென்று வா

நீ இருக்கும் இடத்தில் நானிருப்பேன்
உன் நிழலிலும் பொருளாக குடியிருப்பேன்
தாயிருக்கும் வரையில் கலக்கமில்லை – இந்த
தாயிருக்கும் வரையில் கலக்கமில்லை
எந்த சபையிலும் உனக்கு நடுக்கமில்லை

சென்று வா மகனே சென்று வா
அறிவை வென்று வா மகனே வென்று வா

# ஒரு வார சம்பளமே பலகோடிகள்...

## உடைந்த மொபைலைக்கூட மாற்றாத எளிமை!

கால்பந்தாட்ட வீரர் சாடியோ மானே . மைதான வெற்றிகளைவிட, சேவைகளுக்காக அதிகம் கொண்டாடப்படுகிறார். மற்றவர்களின் வாழ்வில் ஏற்படுத்த முடிந்த மாற்றமும் ஏற்றமும் தாக்கமும்தான் அவரை ஆத்ம திருப்தியோடு இயங்க வைக்கிறது.

நமது தமிழக கிரிக்கெட் வீரர் சின்னப்பம்பட்டி நடராஜன், தனது கிராமத்தில் உள்ள இளைஞர்களுக்காக கிரிக்கெட் மைதானத்தை நிர்மாணித்திருக்கிறார். தான் மேடேறியதோடு நில்லாமல், பள்ளத்தில் உள்ள மற்றவர்களுக்கும் கைகொடுக்கும் மேலான எண்ணம்தான் அது. அந்த எண்ணத்தின் மாஸ் வெர்ஷன்தான், மேற்கு ஆபிரிக்காவில் உள்ள தனது சின்ன கிராமத்தையே நகரமாக மாற்ற முயன்று வரும் 32 வயது சாடியோவின் நகர்வுகள். அந்த அளவுக்கு ஓர் அரசாங்கம் செய்ய வேண்டிய அத்தனை விடயங்களையும் சாடியோ செய்துவருகிறார்.

### உடைந்த மொபைல் டிஸ்பிளே...

வாரத்திற்கு 6 கோடிக்கும் மேல் சம்பளம், லிவர்பூல் போன்ற பிரபலமான அணிக்காக ஆடுமளவு முக்கியத்துவம் என எல்லாம் இருந்தும்கூட கடந்த 2020 இல், உடைந்த டிஸ்பிளே உள்ள போனோடு தொடர்ந்து காணப்பட்டார் சாடியோ. இதுகுறித்துச் செய்தியாளர்கள் கேட்டபோது, "சீக்கிரமாக டிஸ்பிளே மாற்றுகிறேன்" என்றார்.

"நீங்கள் நினைத்தால் போனையே மாற்றலாமே..?" என்று மறுபடி கேட்கப்பட, அவர் தந்த அந்த பதில் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது.

"இப்போது எனக்கிருக்கும் வசதிக்குப் பத்து ஃபெராரி கார்கள், 20 வைரக் கைக்கடிகாரங்கள், 2 ஜெட் பிளேன்கள் என எல்லாவற்றையும் எனது உடமையாக்கிக் கொள்ள முடியும். ஆனால், அதனால்என்ன கிடைத்துவிடப்போகிறது? பசியின் கோர முகத்தைச் சிறுவயதில் பார்த்தவன் நான். போட்டுக்கொள்ள காலணியின்றி வெறும் காலோடு கால்பந்து ஆடிய அனுபவம் எனக்குண்டு. அப்படியிருக்க, இந்தப் பணத்தைக் கொண்டு தேவையிருப்பவர்களுக்கும், நான் அனுபவித்த அதே இன்னல்களில் உழல்பவர்களுக்கும் உதவவே விரும்புகிறேன்" என்று கூறினார்.

ஆடம்பரம் கூட ஒருவகையில் ஒருவரது வறுமையின் பிரதிபலிப்பே. ஆம், மனதளவிலான வறுமை அது. சான்டியோ அதை உணர்ந்தவர் என்பதை உணர்த்தும் பதில தான் அது. அதனைச் சொன்னபோது சாடியோவின் வயது வெறும் 27 மட்டும் என்பதே சொல்லும் அவரது பக்குவத்தை.

### வறுமைக் கிராமங்களும் ஒரு வீரனும்!

அவர் கூறிய எதுவுமே அலங்கார வார்த்தைகள் அல்ல. கவனத்தை ஈர்ப்பதற்காகவோ விளம்பரத்திற்காகவோ சொல்லப்பட்டதும் அல்ல. தான் கூறியபடியேதான் பல ஆண்டுகளாகச் செய்து வருகிறார் சாடியோ. சொந்தக் கிராமமான பம்பலி வறுமையால் வார்த்து எடுக்கப்பட்ட ஊர். பம்பலி மட்டுமல்ல, சாடியோவின் நாடான செனகல் அமைந்திருக்கும் மேற்கு ஆபிரிக்கா மொத்தமும் இதுதான் நிலைமை. இப்பகுதியில் ஏறக்குறைய 70% பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாக ஐ.நா சபை ஒரு முறை வருத்தம் தெரிவித்திருந்தது. அப்படிப்பட்ட கிராமத்திலிருந்து இப்படியொரு நாயகனாக சாடியோ உருவெடுத்திருப்பதே அங்கே பலருக்கும் நம்பிக்கையை விளைவிக்கக் கூடியது தான். ஆனால், அதையும் தாண்டி அவர்களுக்கான நாளையை உண்டாக்கிக் கொண்டுள்ளார் சாடியோ.

அவர் கட்டிய பாடசாலை பல மாணவர்களையும் விடியலை நோக்கிப் பயணிக்க வைத்திருக்கிறது. அவர்களுக்கான இலவச லப்டொப் மட்டுமல்ல, ஒட்டுமொத்த ஊருக்குமே 4G இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்து, "உலகின் அதிவேக ஓட்டத்தோடு எங்களது மக்களும் இணைந்து கொள்ளவே இந்த சிறு முயற்சி" என்றார். அவ்வப்போது அப்பாடசாலைக்குச் சென்று அந்த மாணவர்களோடு நேரம் செலவழித்து அவர்களுக்கிடையே கல்வியின் அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறார். அவர்களுக்காக கால்பந்தாட்ட மைதானத்தையும் கட்டிக் கொடுத்திருக்கிறார் என்றாலும் கல்வி, விளையாட்டு இரண்டுக்குமே முக்கியத்துவம் கொடுங்கள் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறார். சிறப்பாகத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு இரட்டிப்பான உதவித்தொகை தந்து ஆரோக்கியமான போட்டியை உண்டாக்குகிறார்.

### மாதம் 70 டொலர்கள்!

தபால் நிலையம், பெற்றோல் பங்க் என அவர் ஊருக்காகச் செய்துகொண்டுள்ளவற்றின் பட்டியல் நீளுகிறது. இவை மட்டுமன்றி தலா 70 டொலர்கள் ஒவ்வொரு மாதமும் அங்குள்ள அத்தனை குடும்பங்களுக்கும் அவரிடமிருந்து சென்று சேர்கிறது. ஆம் அங்குள்ள ஒவ்வொருவரையும் தன்னுடைய உறவுகளாகப் பார்க்கும் சாடியோ, ஏறக்குறைய கிராமத்தைத் தத்தெடுத்துக் கொண்டுள்ளார்.


தனது கிராமம் மட்டுமன்றி சுற்றியுள்ள ஏறக்குறைய 30 கிராமங்கள் பயனடையும் வகையில் ஒரு மருத்துவமனையை சாடியோ கட்டியுள்ளார். முறையான மருத்துவ வசதி இல்லாததால் இறந்துபோன தன் தந்தையின் நிலை யாருக்கும் வந்துவிடக் கூடாது என்கிற ஆதங்கத்தின் வெளிப்பாடே அந்த மருத்துவமனை!

### மைதானத்துக்கு வெளியேயும்..!

ஆண்டு அனுபவித்து ஓய்ந்து உட்காரும் போதுகூட பிறருக்கு உதவும் எண்ணம், பலருக்கும் வருவதேயில்லை. பணம், ஒரு மனிதனின் சமநிலையை அசைத்துப் பார்க்கும் சர்வ வல்லமை வாய்க்கப் பெற்றது. ஆனால், சாடியோவுக்கோ ஏழு வயதில் தந்தையை இழந்து, தன்னைத் தானே செதுக்கி உயர்த்திக் கொண்டதாலோ என்னவோ அது வெறும் காகிதமாகவும் மற்றவர்களுக்கு தனது உதவியை எடுத்துச் செல்லும் வாகனமாகவுமே அவரால் பார்க்கப்படுகிறது.

கிளை பரப்பிய பிறகும் வேர்களை மறக்காமல் தன்னைச் சார்ந்த சமூகத்திற்குத் திரும்பிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார் சாடியோ. அவர் கட்டியுள்ள பாடசாலையில் உள்ள ஒவ்வொரு செங்கல்லும் அவர் கட்டியுள்ள மருத்துவமனையில் காப்பாற்றப்படும் ஒவ்வோர் உயிரின் இதயத்துடிப்பும் நம்பிக்கையும் புது எழுச்சியே.

மைதான முழக்கங்களும், வெற்றிக் கோப்பைப் பயணங்களும் முடிந்த பின்னரும் வரலாற்றில் ஹீரோவாக நிற்பார்... சாடியோ மானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

412

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நீரிழிவு நோயாளர்கள் ஏன் தமது கால்களைப் பாதுகாக்க வேண்டும்

**நீரிழிவு நோயாளிகளுக்கு கால் புண் ஏற்படுவதற்கான மருத்துவக் காரணிகள்**

✦ கால்நரம்புகளின் செயற்பாடு குறைவடைந்து தொடுகை மற்றும் நோவு போன்ற உணர்ச்சிகளற்றுக் காலில் விறைப்புத் தன்மை ஏற்படல்.

✦ கால்களுக்கான இரத்த ஓட்டம் நலிவடைதல்.

✦ நீரிழிவுக் கட்டுப்பாடு குறைவடைதலும் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரித்தலும்.

✦ கிருமித்தொற்றுக்கள் ஏற்படல்.

**நீரிழிவு கால் புண்களை ஏற்படுத் தக்கூடிய காரணிகள்**

✦ பாதம் மற்றும் உள்ளங்கால் பகுதி களில் ஏற்படும் தோல்தடிப்புத்தன்மை, கொப்புளங்கள் மற்றும் கண்டல் காயங்கள்.

✦ கால்விரல்களிடையில் ஏற்படும் கிருமித்தாக்கம்.

✦ கால்விரல்கள் நகக்கணுக்களில் ஏற்படும் கிருமித்தாக்கம்.

✦ பாதம் மற்றும் கீழ்க்கால்களில் ஏற்படும் வெட்டுக்காயங்களும் கீறல் காயங் களும்.

✦ பிராணிகள், பூச்சிகளால் காலில் ஏற்படும் கடி மற்றும் குத்துக்காயங்கள்.

**நீரிழிவு கால்புண் அறிகுறிகள்**

✦ மேற்குறிப்பிட்ட காரணிகளால் பாதிக்கப்பட்ட காலின் பகுதியில் கிருமித் தாக்கமேற்படுவதால் பாதம் சிவந்து வீக்க மடைந்து உஷ்ணமாக இருத்தல்.


✦ குறிப்பிட்ட காலின் பகுதி கறுப்பு நிறமாகி சீழ்ப்பிடித்தல்.

✦ பாதம் மற்றும் கால்களில் துர்நாற்றம் வீசுவதுடன் புண்கள் உருவாதல்.

✦ பாதத்தின் என்புகள் கிருமித்தொற்றுக் குள்ளாதலும் விரல் மற்றும் பாதம் அழுகிப் போதலும்.

**நீரிழிவு கால்புண் உங்களை அங்க வீனர்களாக்கலாம்**

✦ பாதிக்கப்பட்ட கால்விரல் வெட்டி அகற் றப்பட வேண்டி வரலாம்.



✦ முன்பாதங்கள் வெட்டியகற்றப்பட வேண்டி வரலாம்.

✦ முழங்காலுக்கு கீழாகக் கால் வெட்டிய கற்றப்படலாம்.

✦ முழங்காலுக்கு மேலாகக் கால் வெட்டிய கற்றப்படலாம்.

**நீரிழிவு கால் புண் காரணமாக ஏற்படும் அங்கவீனத்தை தடுக்கும் முறைகள்**

✦ கால்மற்றும் பாதங்களைத் தினமும் கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல்.

✦ தினமும் கால்விரல்களுக்கிடையில் ஈரலிப்பின்றி பேணுதல்.

✦ தினமும் கால்விரல்கள், விரல் ஈறுகள் பாதம் மற்றும் கால்களின் கால்புண் ஏற்படக் கூடிய காரணிகள் பற்றி அவதானித்தல்.

✦ இதற்குக் குடும்ப உறுப்பினர்கள் உதவுதல் அவசியம்.

✦ தொழில் செய்யும் இடங்களிலும் வீதியில் நடக்கும்போதும் பாதணிகள் அணிதல்.

✦ இறுக்கமான மற்றும் மிகவும் தொய்ந்து பழுதான காலணிகளைத் தவிர்த்தல்.

✦ கால்விரல், நகங்கள் மட்டமாக வெட்டுதல்.

✦ பாதத்தில் ஏற்படும் தோல் தடிப்புக்கள் மருத்துவரால் சிகிச்சை அளிக்கப்பட்டு நீக்கப்பட வேண்டும். இவற்றை நோயாளி வெட்டி யகற்ற முற்படக்கூடாது.

✦ பாதம் மற்றும் காலில் ஏற்படும் காயங்களுக்கு (சிறிய காயங்கள் உட்பட) உடனடி மருத்துவ ஆலோசனை பெறுதல். தாமதப்படுத்தலும் நாட்டு வைத்தியம் செய்தலும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

✦ நீரிழிவுக்குப் பாவிக்கும் மருந்து களைத் தவறாது உபயோகித்து இரத்தத்தில் சீனியின் அளவைப் பேணுதல்.

✦ புகைப்பிடித்தலைத் தவிர்த்தல்

Prof. Sittampalam Rajendra,
Professor in surgery &
Consultant Surgeon,
Teaching Hospital-Jaffna.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 50 குழந்தைகள் எயிட்ஸ் நோயால் பாதிப்பு!

## அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் தற்போது எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணரான சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

தற்போது நாடு முழுவதும் சுமார் 3,500 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் 50 குழந்தைகளும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சமீபத்திய தரவுகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

தற்போது கண்டறியப் பட்ட நோயாளிகளில் ஏறக்குறைய 81 சதவீதமானவர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதாகவும், எதிர்காலத்தில் இந்தநோய் மேலும் பரவும் அபாயம் உள்ளதால் மக்கள் இது குறித்து விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியம் எனவும் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தினால் கற்கை நெறிகளிற்கான 2024/25 ஆம் ஆண்டிற்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப் பட்டம், கணக்கியல் மற்றும் நிதியியல் முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம், சந்தைப் படுத்தல் முகாமைத்துவம் முகாமைத்துவக் கற்கைகள் சிறப்பு மாணிப்பட்டம், மனித வள முகாமைத்துவக் கற்கைகள் சிறப்பு மாணிப்பட்டம் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் WWW.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 10.09.2024 இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் அறிவித்துள்ளார். மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அமரர் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவின் நூற்றாண்டு நிறைவு நிருத்திய ஆராதனை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய பிரதம குரு சிவப்பிரம்மஸ்ரீ இ. விக்னேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி)

## தெய்வீக சுகானுபவம்-10

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு, யாழ்.இந்திய துணைத் தூதரகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தெய்வீக சுகானுபவம் 10 நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை நல்லூர் சங்கிலியன் தோப்பில் மாலை 7 மணி முதல் உள்ளூர் கலைஞர்களின் கலை நிகழ்வுடன் இந்தியாவின் கர்நாடக இசைக் கலைஞர் கலாநிதி. எஸ். சௌம்யாவின் மாபெரும் இசைக்கச்சேரியும் நடைபெறவுள்ளது. (நி)

## நல்லூர் உற்சவகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தப்பெருமான் மஹோற்சவ காலத்தில் நடத்தப்படுகின்ற அருளுரை வழமை போல் இம்முறையும் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் சிவ குரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் நடத்தப்படும்.

மஞ்சத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் தீர்த்தோற்சவம் வரை தினமும் இரவு 8.00-8.30 மணிவரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறும். (நி)

### யாழில் சர்வமத தலைவர்களை சந்தித்த திலித் ஜயவீர

(யாழ்ப்பாணம்)

சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்து சர்வமத தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

நல்லை ஆதீனம், ஆயர் இல்லம், ஆரிய குளம் நாகவிகாரை, ஐந்து சந்தி ஜும்மா பள்ளிவாசல் மற்றும் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் திலித் ஜயவீர சென்றுள்ளார்.

இதன்போது, சர்வஜன அதிகாரத்தின் கட்சித் தலைவர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க, அனுராத ஜகம்பத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (நி-33)


**விற்பனைக்கு**

**மாவிட்டபுரம்**

மாவிட்டபுரம் வீமன்காமம் அருகில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (257)

தொடர்புகளுக்கு:- விமல்

**077 734 8766**


**மணமகள் தேவை**

கனடாவில் வசிக்கும் 38 வயதுடைய அழகிய மணமகனுக்கு தகுதியான மணமகளை எதிர்பார்க்கிறோம். வெளிநாடு செல்ல விரும்புவர்கள் மட்டும். Whatsapp இல் தொடர்பு கொள்ளவும்.

**+14315318810** (257)


# நீங்கா நினைவில்

**3ஆம் ஆண்டுகள்**



மலர்வு - 15.09.1943 உதிர்வு - 21.09.2021

**அமரர்.கந்தன் இரத்தினம்**

[ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் சமாதான நீதவான்-யாழ்ப்பாணம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை உறுப்பினர்]

திதி சதுர்த்தி 18.08.2024

**9ஆம் ஆண்டுகள்**



**அமரர்.கமலாதேவி இரத்தினம்**

மலர்வு - 21.07.1943 உதிர்வு - 18.09.2015

தி.தி பஞ்சமி 08.09.2024

அன்பான பண்பான பெற்றோரே
வாழ்வு எமக்கு தந்த பெருந்தகைகளே
எண்ணத்தில் உயர்வு கொண்டோரே
எண்ணியதை சாதித்து மகிழ்ந்தோரே

இல்லறத்தின் விளைபயனாய்
எம் மகவை பெற்று மகிழ்ந்தீர்
உயர்ந்த சிந்தனையின் விளைபயனாய்
உலகை வென்றோரே

கிராமஅலுவலர் பிரதேச சபை உறுப்பினர்
சமாதான நீதவான் சமூக சேவையாளன்
எனப் பல பதவியும் புகழும் கண்டு
மகிழ்ந்து நின்ற பெரியானே நீ வாழி

இவ்வுலக வாழ்வில் உறவுகளின் மனங்களில்
தடம் பதித்த பேராளனே
உம் ஆத்மா சாந்தி பெற
இறைவனை அனுதினமும் வேண்டி நிற்கின்றோம்.

(சி-1000)

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொலை செய்யப்பட்ட வைத்தியர்

# இந்தியாவில் தீவிரமடையும் வைத்தியர்களின் போராட்டம்!

(டில்லி)

**கொல்கத்தா ஆர்.ஜி. கர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியாற் றிய 31 வயது பயிற்சி பெண் மருத்துவர் கடந்த 9 ஆம் திகதி வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**



இந்நிலையில் உயிரிழந்த பெண் மருத்துவருக்கு நீதி கோரி நாடளாவிய ரீதியில் வைத்தியர்கள் மற்றும் பொது மக்களால் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்போராட்டங்களின் போது வன்முறைச் சம்பவங்களும் ஆங்காங்கே இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியா முழுவதும் நேற்றுக் காலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரை மருத்துவ சேவைகள் நிறுத்தப்பட்டது.

அவசர சிகிச்சைகள் மாத்திரம் இடம்பெற்றதுடன் வெளி நோயாளிகள் பிரிவு மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியன நடைபெறவில்லை. (நி)

### டோக்கியோவில் 'ஆம்பில்' புயல் 17,000 பேர் வெளியேற்றம்



(டோக்கியோ)

ஜப்பானின் டோக்கியோவை பாதித்த ஆம்பில் புயல் காரணமாக இசுமி நகரின் கரையோரப் பகுதியில் வசிக்கும் சுமார் 17,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

புயலின் வேகம் மணிக்கு 212 கிலோ மீற்றராக அதிகரிக்கலாம் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளதால் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளி களை குறித்த பகுதியில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (நி)

## பெண்களைக் கடத்த வந்த பாராளுமன்ற வீரர்கள்

### எதிர்த்து நின்ற கிராமவாசிகள்

#### 80 சூடான் கிராமவாசிகள் படுகொலை

(சூடான்)

உள்நாட்டுப் போரினால் சூடான் நாடு துண்டாடப்பட்டு வருகிறது. சூடான் ராணுவத்தின் இருவேறு படைகளுக்கிடையே கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட மோதல் உள்நாட்டுப் போராக வெடித்தது.

இந்த போரில் இதுவரை சுமார் 150,000 மக்கள் இறந்துள்ளனர். போரில் ஏற்பட்ட பஞ்சத்தால் 11 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பசியால் மக்கள் மண்ணையும், இலைகளையும் சாப்பிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உணவுக்காக தினமும் ராணுவ வீரர்களால் பலாத்காரம் செய்யப்பட பெண்கள் வரிசையில் நிற்கும் அவல நிலையில் தான் தற்போது சூடான் உள்ளது.

இந்நிலையில் மத்திய சூடானில் உள்ள சினார் மாகாணத்தில் ஜால்க்னி என்ற கிராமத்தில் பாராளுமன்ற படை வீரர்கள் சுமார் 80 கிராமவாசிகளை கடந்த வியாழனன்று சுட்டுப் படுகொலை செய்துள்ளனர்.

முன்னதாக அந்த கிராமத்தைச் சேர்ந்த பெண்களை மற்றைய வீரர்கள் கடத்த முயன்றுள்ளனர்.

இதனால் ஆத்திரமற்ற கிராம மக்கள் எதிர்த்து நின்ற நிலையில் அவர்களை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 80 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த புதன் கிழமை அன்று ஸ்விடர்லாந்தில் அமெரிக்காவால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் பேச்சு வார்த்தையில் பங்கேற்க சூடான் ராணுவம் மறுத்தது. சமீபத்தில் சூடான் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி மக்களை எந்தவித வாரண்ட்டும் இன்றி கைது செய்யலாம் என்ற அதிகாரம் ராணுவத்துக்கு வழங்கப்பட்டதும் கவனிக்கத்தக்கது. (நி)

## லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் குழந்தைகள் உட்பட 10 பேர் பலி

(லெபனான்)

தெற்கு லெபனானின் நவாட்டி பகுதியில் ஸ்ரேல் விமானப்படையினர் அதிரடித்தாக்குதல் நடத்தினர். இந்த் தாக்குதலில் ஒரு பெண், 2 குழந்தைகள் உட்பட 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 5 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அவர்களில் இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனும் தகவல் வெளியாகியுள்ளது.

காசாமுனையில் செயற்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர்.

இதில் 100 இற்கும் மேற்பட்டோரை இன்னும் பிணைக்கைதிகளாக ஹமாஸ் பிடியில் உள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதனால் காசாவில் இஸ்ரேல் அதிரடித் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தப் போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உட்பட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையே, இஸ்ரேல்- ஹமாஸ் போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயற்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயற்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளும் ஆதரவு அளித்து வருகின்றனர். இந்த ஆயுதக் குழுக்கள் இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலுக்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 4 தேசிய விருதுகளை அள்ளிய பொன்னியின் செல்வன்

(டில்லி)

2022ஆம் ஆண்டுக்கான இந்திய மத்திய அரசின் 70 ஆவது தேசிய திரைப்பட விருதுகள் டில்லியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஹிந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகள் அடிப்படையிலான திரையுலகைச் சேர்ந்த கலைஞர்களை அங்கீகரிக்கும் வகையில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் வெளிவந்த



'பொன்னியின் செல்வன்1' திரைப்படம் சிறந்த தமிழ் திரைப்படம், சிறந்த பின்னணி இசை, சிறந்த ஒளிப்பதிவு மற்றும் சிறந்த ஒலிப்பதிவு என 4 பிரிவுகளின் கீழ் விருதுகளை வென்றுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான கண்ணோட்டம் மனதைத் திறந்து புதிய சாதனைகள் புரியும் புத்துணர்வைத் தருகிறது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி வேட்பாளர்களில் இவர் பரவாயில்லை எனும் தியறி

அதிகாரப்பகிர்வு தரக்கூடிய ஜனாதிபதி வேட்பாளரை ஆதரியுங்கள் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் கூறியதாகத் தக்வல்கள் வெளியாகியிருந்தன.

இந்தியத் தூதுவரைப் பொறுத்தவரை அவரின் இராஜதந்திர ரீதியான கருத்தாக இதைப் பார்க்கலாம்.

ஆனால் எங்களின் கடந்தகால பட்டறிவின் அடிப்படையில், அதிகாரப்பகிர்வு தரக்கூடிய சிங்களத் தலைவர்கள் எவரும் இன்னும் பிறக்கவில்லை என்பதுதான் உண்மை.

இந்த உண்மையை பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் எடுத்துக் கூறியிருப்பார் என நம்பலாம்.

இஃது ஒருபுறமிருக்க, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய சிங்களத் தலைவர்கள் எவரும் இங்கு இல்லை என்பதுதான் நிறுதிட்டமான உண்மை.

ஆம், இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

தவிர, நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை அனைத்து இன மக்களும் சகோதரர்களாக ஒன்றுசேர்ந்து கொண்டாடுவோம் என்றும் பகிரங்கப்படுத்தியிருந்தார். ஆனால் நடந்தது எதுவுமில்லை.

இதேபோல கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை தமிழ் மக்கள் ஆதரித்தனராயினும் யுத்தக் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்ற கருத்து எழுந்தபோது, எமது படையினரிடம் விசாரணை நடத்த அனுமதிக்க முடியாது என சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார்.

இதேபோலத்தான் மகிந்த ராஜபக்ஷ – சரத் பொன்சேகா என்ற இருதுருவங்கள் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியபோது, தமிழர்கள் சரத் பொன்சேகாவை ஆதரித்தனர்.

ஆயினும் அவர் ஒரு சந்தர்ப்பத்தில் இந்த நாட்டில் தமிழர்கள் வாழலாம். ஆனால் அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளே. இந்த நாடு பௌத்த சிங்களவர்களுக்கு மட்டும் உரியது எனக் கூறியிருந்தார்.

ஆக, நாங்கள் ஆதரித்த சிங்களத் தலைவர்கள் கூட எங்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை எனும்போது, அவர்கள் எங்களுக்கு உரிமை தருவார்கள் என நாம் நம்புவோமாயின் எங்களை விட்ட ஏமாளிகள் வேறு எவருமாக இருக்க முடியாது.

இதை நாம் கூறும்போது, அப்படியானால் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற கேள்வி எழும்.

இந்தக் கேள்விக்கு விடை காண்பதாக இருந்தால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் ஒப்பீட்டு அடிப்படையில் இனத்துவேசம் குறைந்த தலைவர் யார்? தமிழ் மக்களுக்கு ஓரளவேனும் உரிமையை வழங்க வேண்டும் என்று திரிகரண சுத்தியோடு நினைக்கக்கூடிய வேட்பாளர் எவர்.

யார் ஜனாதிபதியாக வந்தால், இந்த நாடு விமோசனம் அடையும் எனச் சீர்தூக்கி ஆராய்ந்து, அதன் அடிப்படையில் அத்தனை வேட்பாளர்களிலும் இவர் பரவாயில்லை என்று யாரை நாம் ஏற்றுக் கொள்கிறோமோ அத்தகையவருக்கு வாக்களிப்பதுதான் உத்தமம்.

இதைவிடுத்து, இனப் பிரச்சினைக்குத் தீர்வு தருவார் – தீர்வு தருவதாக உறுதிமொழி தந்துள்ளார் என்பதை வைத்து வாக்களிப்பது எனத் தீர்மானித்தால், நாம் இன்னொரு தடவை ஏமாற்றப்படுவோம் என்பது சர்வ நிச்சயம்.

# ஐ.எம்.எப் திட்டத்தில் திருத்தம் மேற்கொண்டால் நாடு மீண்டும் வீழ்ச்சிப் பாதைக்குச் செல்லும்

## முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ரணில்

*(அநுராதபுரம்)*

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நாடு மீண்டும் வீழ்ச்சிப்பாதைக்கு செல்லும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முதலாவது தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இது எமது ஆரம்பப் பயணம் மாத்திரமே. நாம் இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இது பிளவடைந்து செல்வதற்கான நேரமல்ல.

இது மும்மதத்தினரும் இணைந்துள்ள இடமாகும். அதனாலேயே கட்சிவேறுபாடின்றி இன்று அனைவரும் எம்முடன் இணைந்துள்ளனர். அதனாலேயே நான் கட்சி வேறுபாடின்றி சுயாதீன வேட்பாளராகத் தேர்தலில் முன்னிலையாகியுள்ளேன்.

நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகி நெருக்கடியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்திலேயே நான் இந்த நாட்டை பொறுப்பேற்றேன். நாடு நெருக்கடியை எதிர்நோக்கிய போது முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலகினார். எதிர்க் கட்சித் தலைவர் ஒலிம்பிக் போட்டியில் ஓடுவது போன்று ஓடி ஒழிந்தார்.

அனைவரும் நாட்டை பொறுப்பேற்கும் முயற்சியில் பின்வாங்கிச் சென்றார்கள். அவர்களுக்கு மத்தியில் நான் இந்த நாட்டை பொறுப்பேற்றேன். இந்த நாட்டு மக்கள் தங்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தீர்க்கமான தருணம் வந்துள்ளது.

எரிவாயு எரிபொருள் வரிசையுகத்தை நிறைவுக்குக் கொண்டுவந்தேன். மக்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகள் இன்னும் பல. மின்சாரமின்றி மக்கள் அவதியுற்றனர். இன்று இந்த நாட்டில் ஜனாதிபதியாகும் கனவில் உள்ள சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திசாநாயக்க போன்றோர் அப்போது எங்கு சென்றார்கள்?

மக்களின் துன்பம் அறிந்தவர்களாக இருந்தால் அவர்கள் அன்று இந்த நாட்டைப் பொறுப்பேற்றிருக்க வேண்டும் ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் முயற்சியின் போது மக்கள் மீது வரிசுமத்தப்பட்ட போது அவர்கள் எதிர்கொண்ட துன்பத்தை நான் அறிவேன்.

இன்று மக்கள் எதிர்கொண்ட சுமைகள் படிப்படியாக குறைவடைந்துவருகின்றன. மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. காணி உரிமைகள் வழங்கப்படுகின்றன. வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு அரிசி மானியம் வழங்கப்படுகின்றது.

நாட்டை மீட்டெடுக்கும் திட்டத்தின் போது சர்வதேசநாணய நிதியத்தின் ஒத்துழைப்புப் போன்று உலகின் 18 நாடுகள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. இந்த அனைத்துத் தரப்பினரும் எமக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் வேலைத் திட்டத்திற்கமைய செயற்படுவதாயின் கடன் செலுத்துவதில் நிவாரணம் வழங்குவதாகக் கூறுகின்றனர். நாடு இன்று வீழ்ச்சிப்பாதையில் இருந்து கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

கடன்மறுசீரமைப்பு வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேசநாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தினை மறுசீரமைக்கப்போவதாக அநுரவும் சஜித்தும் கூறுகின்றனர்.

அவர்களின் இந்தக் கூற்று நாட்டை வீழ்ச்சிப்பாதைக்குக் கொண்டு செல்லும் முயற்சியாகும். அதாவது சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நாடு மீண்டும் வீழ்ச்சிப் பாதைக்குச் செல்லும் இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## மோ.சைக்கிள் விபத்து இளம் குடும்பஸ்தர் பலி

*(கொழும்பு)*

வாகல்கட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலிவெவப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாகல்கடப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெபிதிகொல்லேவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய திருமணமான இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது வீதியின் குறுக்கே எருமை மாடு ஒன்று மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, கன்றை வயிற்றில் சுமந்திருந்த எருமை மாடும் மோட்டார் சைக்கிள் செலுத்துனரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த நிமேஷ் ருக்ஷான் ரட்சரவின் மனைவி கர்ப்பமாக இருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகல்கடப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

ரூ. 1 கோடியே 30 இலட்சம் பெறுமதியான

## 3 கஜ முத்துக்களுடன் புத்தளத்தில் மூவர் கைது

*(புத்தளம்)*

1 கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான 03 கஜ முத்துக்களுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக புத்தளம் விசேட அதிரடிப்படை முகாம் தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப் படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் புத்தளம் விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரிகள் புத்தளம் குளக்கரை பகுதியில் முகவர்களை ஈடுபடுத்தி இந்த சுற்றிவளைப்பு மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பில் மாவனெல்லப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் மற்றும் புத்தளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

## வல்வெட்டித்துறையில் வன்முறையில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது

*(யாழ்ப்பாணம்)*

வல்வெட்டித்துறையில் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக மூன்று பேர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐந்து வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் வன்முறைக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மீட்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் உத்தரவுக்கமைய யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப்பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற ஆறு பேர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் மூன்று இலட்சம் வரையான பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பாக 19 மற்றும் 23 வயதான கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 2 பேரும் அச்சுவேலியைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத செயற்பாடுகள் மறவன்புலோவில் அதிகரிப்பு

## கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மறவன் புலோ கிராமத்தில் அண் மைக் காலமாக இரவு வேளைகளில் திருட்டு உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகள் அதிகரித் துக் காணப்படுவதாக கிராம மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேற்படி கிராமத்தில் ஆட்கள் அற்ற வீடுகளில் இரவு வேளைகளில் வெளி இடங்களைச் சேர்ந்த நபர்கள் திருட் டில் ஈடுபடுவதாகவும்-அத்துடன் இரவு வேளைகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் தெரிவித்த னர்.

எனவே மறவன் புலோ கிராமத்தில் இடம் பெறுகின்ற திருட்டு உள்ளிட்ட சட்டவிரோ தச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலி ஸார் விரைந்து நடவ டிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேலும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-30)


## Florance nursing Home Care Service Centre
## புளோரன்ஸ் நேர்சிங் ஹோம்கேர் சர்வீஸ் சென்டர்

- உங்கள் தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக முதியோர்களை வீட்டில் வைத்து பராமரிக்க முடியாதவர்கள், பாரிசவாதமுடையவர்கள் மற்றும் நீண்டகால படுக்கை நோயாளிகள் அனைவரையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் மிகப் பாதுகாப்பாகவும் நாங்கள் பார்த்துக் கொள்வோம்.
- உணவு முறைகள் மிக ஆரோக்கியமாக வழங்கப்படும்.
- முதியோர்களின் மனநிலையறிந்து/ உடல்நிலையறிந்து பொழுதுபோக்கான விடயங்கள்/ உடற்பயிற்சி/ பிசியோதரபி/ மன அமைதிக்கான தியானங்கள் மற்றும் வழிபாடுகள் நடைபெறும்.
- முதியோர்களின் ஆரோக்கியம் கருதி மருத்துவர்களின் ஆலோசனைகள் மற்றும் மாதாந்த கிளினிக் மருத்துவ சேவைகள் என்பன வழங்கப்படும்.
- அவர்களின் வீடுகளில் இருப்பது போலவே மகிழ்ச்சியாகவும் அன்பாகவும் எமது தாதியர்களின் மேற்பார்வையிலும் உதவித் தாதியர்களின் பராமரிப்பிலும் பாதுகாக்கப்படுவார்கள்.



மிகக் குறைந்த கட்டணத்தில் சிறந்த நிறைவான சேவையை வழங்குகின்றோம்.

(1725)

அனுமதிகளை பெற்றுக்கொள்ள - 077 482 4473
077 718 6438

முகவரி:- மருதனார்மடம் உடுவில்.



# ENGLISH CLASSES

(For group of Minimum Five Members)

- English Language......Gr9, Gr10, Gr11 and GCE A/L
- English Literature......Gr10, Gr11 and GCE A/L
- English Language and Literature ...... For Degree and Diploma Classes
- IELTS............ Preparation Classes
- TOFEL............ Preparation Classes
- Spoken English Classes
- Business Communication...... Public and Private Sector Employees (English for Employees of Public and Private Sector)

**Starts on 18.08.2024**

**Note: School Students Should come with parents for enrollment**

(பாடசாலை மாணவர்கள் பதிவிற்கு பெற்றோருடன் வருகை தரல் வேண்டும்)

**Teacher: Mr.K. Subramaniam (Retd.ADE-English)**

158, POTPATHY ROAD, KONDAVIL.

TP-077 351 8308, 071 812 5937.

(1685)


## திருப்புகழ் பாடும் அன்பது செய்பதியில் தந்து அடியவர்களின் துன்பங்கள் நீக்கி அனுக்கிரகம் புரியும் அருள்மிகு செல்வச் சந்நிதியான் தேரில் மாமணி வீதியில் வடம்பிடிப்போம் திருவடிகளை மறவாமல் வணங்குவோம்

பத்தர்க ணப்ரிய நிர்த்தந டித்திடு
பட்சி நடத்திய குகபூர்வ
பச்சிம தட்சிண வுத்தர திக்குள
பத்தர்க ளற்புத மெனவோதுஞ்
சித்ரக வித்துவ சத்தமி குத்ததி
ருப்புக ழைச்சிறி தடியேனுஞ்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்தவ நுக்ரக மறவேனே
கத்திய தத்தைக ளைத்துவி ழுத்திரி
கற்கவ ணிட்டெறி தினைகாவல்
கற்றகு றத்திநி றத்தக முத்தடி
கூட்டிய ணைத்தப னிருதோளா
சத்தியை யொக்க இடத்தினில் வைத்த
கப்பனு மெச்சிட மறைநூலின்
தத்துவ தற்பர முற்றுமு ணர்த்திய
சர்ப்பகி ரிச்சுரர் பெருமாளே.

இது திருப்புகழ்தினம் ஓதுவோம்-எண் 392

பக்தர் கூட்டங்களின் மீது பிரிய முள்ளவனே! நடனம் நடிக்கவல்ல மயிலை வாகனமாக கொண்ட அருள் மிகு செல்வச் சந்நிதியானே. கிழக்கு மேற்கு, தெற்கு, வடக்கு நான்கு திசை கள் எங்கும் உள்ள பக்தர்கள் அற்புதம் எனக் கொண்டாடும் முருகனே! அழகிய கவி அமைப்பின் **ஒலி மிகுந்துள்ள திருப்புகழ் என்னும் அருமை வகை கவிகளைச் சிறிதளவு அடியேனும் பாடும் படியாக வைத்தும் உலகில் பரவும் படியாக வெளிப் படுத்தும், கருணையுடன் அனுக்கிரகம் புரிந்ததை மறவேன். செல்வச் சந்நிதியான், நல் லைக்கந்தன், கதிர்காமக்கந்தன், உகந்தை முருகன், திக்கரை முருகன் அருள் அனுக்கிரகம் மறவேனே.**

திருப்புகழ் மற்றும் பிற நூல்களையும் ஓதி எல்லாம் வல்ல முருகப் பெருமான் திருவருளைப் பெறுவோம்.

வேல் பிடித்து நிற்பவனின் கால் பிடித்து தொழுத எங்கள் குருநாதன், அருணகிரி நாதரை கரம்பிடித்து உயர்த்தி தன் மயிலில் இருத்தினான். வேலும் கொடுத்தான். நாமும் நாக்கால் திருப்புகழ் பாடுவோம், நல்லதைச் சொல்லுவோம் திருப்புகழ் பாடிப் பணி வோம். தூய்மை அடைவோம், அமை தியும், ஆன்மிக வழியில் நிற்போம், நம் மையும் முருகன் கரம்பிடித்து உயர்த் துவான். அன்னதா னக் கந்தன் என அழைக்கப்படும் முரு கன் அடையாக் கத வாகவும் பல ஆன் மிக தொண்டு நடத் தும் அருள்மிகு சந்தியான் ஆச்சிர மத்தையும் மற வோம்.



க.கு.க.சிவபாலன்,
போசகர்,
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் அருள்மிகு மடாலயம்.
(நி-899)


## மணமகள் தேவை

1993. இந்து. ரோகினி. ENGINEER, பூர்வீகம்-உடுவில். வதியுமிடம்-கொழும்பு மணமகன் பதிவு இல: 10893. தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமணசேவை கொழும்பு 04 (1354)

அழையுங்கள் 076 664 9401

## மணமகள் தேவை

1991. இந்து. திருவோணம். DOCTOR, பூர்வீகம்-யாழ்ப்பாணம். வதியுமிடம்-கனடா மணமகன் பதிவு இல: 10770. தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமணசேவை கொழும்பு 04 (1354)

அழையுங்கள் 076 664 9401

## மணமகன் தேவை

2000. இந்து. பூரடம். CIVIL ENGINEER, பூர்வீகம்-கரவெட்டி. வதியுமிடம்-தெல்லிப்பழை மணமகள் பதிவு இல: 10321. தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமணசேவை கொழும்பு 04 (1354)

அழையுங்கள் 076 664 9401

## மணமகன் தேவை

1992. இந்து. புனர்பூசம். TEACHER, பூர்வீகம்-நெடுந்தீவு. வதியுமிடம்-கிளிநொச்சி மணமகள் பதிவு இல: 10670. தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே. www.EQMarriageService.com இணையவழி திருமணசேவை கொழும்பு 04 (1354)

அழையுங்கள் 076 664 9401



தெரிவுசெய்த பொருட்கள் 40% வரை கழிவு



JAFFNA EXPO - 2024

நிர்மாணம், கைத்தொழில், கல்வி, வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்ட விழா

23 24 25 ஆம் திகதி ஆகஸ்ட் 2024

@ முற்றவெளி விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம், இலங்கை

மு.ப.10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை




(இ)

+94 77 22 79 594
+94 72 21 22 709


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துண்டாக்கப்...

தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த மாதம் கை துண்டிக்கப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, நீண்ட மணி நேர சத்திரசிகிச்சையின் பின்னர் வெற்றிகரமாக மீண்டும் கை பொருத்தப்பட்டு இளைஞன் வீடு திரும்பியுள்ளார்.

குறிப்பிட்ட சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வைத்தியசாலை சமூகம் சார்ந்த நன்றி என வைத்தியசாலைப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ரூ.100 மில்லி...

கொடுக்கப்படவுள்ளது.

அத்துடன் வைத்தியசாலை ஊழியர்களுக்கான விடுதி புனரமைப்பு மற்றும் உள்ளக நடைபாதை புனரமைப்பு ஆகிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-7)

## 'வோட் மணி...

அமைப்பு உள்ளிட்ட ஆறு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளினால் உருவாக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பொருட்களின்...

பொருட்களின் விலைகள் பின்வருமாறு,

ஒரு கிலோ வெள்ளைப் பச்சை அரிசி - 200 ரூபாய், ஒரு கிலோ உருளைக்கிழங்கு - 215 ரூபாய், ஒரு கிலோ வெள்ளைச் சீனி - 247 ரூபாய், ஒரு கிலோ பருப்பு - 278 ரூபாய், ஒரு கிலோ கடலை - 441 ரூபாய், ஒரு கிலோ காய்ந்த மிளகாய் - 785 ரூபாய். (ம-7)

## எமது அரசாங்...

யில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

மதுபான உற்பத்தியாளர்கள் போன்ற வர்த்தகர்கள் செலுத்தத் தவறிய வரியை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேவேளை எளிமைப்படுத்தப்பட்ட வரி முறை அறிமுகப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

மருந்துகள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள், பாடசாலைப் பொருட்கள் மற்றும் கூடுதல் வாசிப்புப் புத்தகங்கள் மீதான வற் நீக்கப்படும் எனவும், உணவுப் பொருட்களுக்கான வற் வரியை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார். (ம-7)

## நாகப்பட்டினம்...

னது.

கப்பலில் செல்லும் பயணிகளுக்கு கப்பல் நிறுவனத் தலைவரால் வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கப்பல் சேவை நிறுவனத்தின் தலைவர் நிரஞ்சன் நந்தகோபன், காங்கேசன்துறை துறைமுகத்தின் அதிகாரிகள், கடற்படையினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

போதுமான பயணிகள் பிரயாணம் செய்யாமையால் முன்னைய காலத்தில் "சிவகங்கை" கப்பல் இரத்துச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பிரபாகரனின்...

தைக் கண்டு கமராவை கீழே போட்டேன் என இந்தியா ருடே குழுமத்தின் ஆசிரிய பீட இயக்குநர் ராஜ் செங்கப்பா தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய ஊடக நட்புறவு சங்கம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு 15 வருடங்களின் பின்னர் மீண்டும் வந்துள்ளேன். இறுதியாக 2009ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தேன். அந்த ஆண்டு இலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையான ஆண்டு. தற்போது தேர்தலை எதிர்நோக்கியுள்ள இலங்கை வரலாற்றின் முக்கியமான கட்டத்தில் உள்ளது.

இந்தியாவிற்கு இந்த வருடத் தேர்தல் எவ்வாறு முக்கியமானதாக அமைந்ததோ அதேபோன்று இலங்கைக்கும் இந்த வருடத் தேர்தல் தீர்க்கமானதாக அமையலாம்.

வேலுப்பிள்ளை பிரபாகரனை முதலில் படம்பிடித்தவன் நான். நான் அவரின் முகத்தை உலகிற்கு முதலில் தெரியப்படுத்தினேன். 1982ம் ஆண்டு மெட்ராசில் ஒரு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் தகவல் வந்தது. அவர்கள் யார் என்பது அவ்வேளை எனக்குத் தெரியாது.

அந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட ஒருவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டிருந்தார்.

அவரை அதுவரை எவரும் பார்த்ததில்லை. அவரது புகைப்படங்கள் எதுவும் அதுவரை இருக்கவில்லை. இலங்கையின் அரச புலனாய்வாளர்களிடம் கூட அவரின் புகைப்படம் இருக்கவில்லை. அவரைக் கைவிலங்குடன் நான் படமெடுத்தேன்.

நான் அவரை படமெடுத்தவேளை அவரின் முகத்தில் தெரிந்த சீற்றத்தைப் போல சீற்றத்தை வேறு எவரின் முகத்திலும் நான் பார்க்கவில்லை.

கடும் சீற்றம் கோபம் அவரது முகத்தில் தென்பட்டது. நான் அச்சத்தில் கமராவைக் கீழே போட்டேன். இலங்கை அரச புலனாய்வுப் பிரிவினர் அந்தப் படத்தை பெறுவதற்காக கடும் முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்றார்.(ம-7)

## திருட்டுத்தன...

லுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டாவது வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் களுத்துறை பண்டாரகம நகரில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரவிக்கையில்,

நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்கு தெளிவான வேலைத் திட்டங்கள் இருக்க வேண்டும். அரசாங்கம் ஒன்றுக்குள் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டத்திற்கு கருத்துக்கள் பரிமாறப்பட வேண்டும். கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டத்திற்கு கருத்துக்கள் பரிமாறப்பட வேண்டும். இருந்தாலும் 24 மணித்தியாலமும் 365 நாட்களும் திருட்டை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் கீழிருந்து மேல் வரை செல்கின்றது. ஊழலும் மோசடிகளும் திருட்டுத்தனமும் நாட்டில் காணப்படுகின்றன. விசா, புதுப்பிக்கத்தக்க சக்தி, எண்ணெய் கொடுக்கல் வாங்கல் ஆகிய கொடுக்கல் வாங்கல்களின் ஊடாக திருடப்பட்ட பணத்தை அவர்களின் வயிற்றை நிரப்புகின்ற அரசியலைச் செய்வதற்காகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர் என்றார். (ம-7)

## சுதந்திரமான...

களிப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று பெஃப்ரல் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய அமைச்சரவை, அரசாங்க ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 25,000 ரூபாயை வழங்குவதுடன், 2025ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இருந்து அவர்களின் சம்பளத்தில் 24 வீத அதிகரிப்பையும் வழங்குவதற்குத் தீர்மானித்திருந்தது.

தேர்தலுக்கு முன்னதாக, குறிப்பாக தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு, அரசு ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் நடவடிக்கை, அவர்களின் சுதந்திரமான வாக்களிப்பை தெளிவாக பாதிக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே தொழிற்சங்கங்கள் 10,000 ரூபாய் சம்பள உயர்வைக் கோரியபோது, அதற்குப் போதிய நிதி இல்லை எனக் கூறி அரசாங்கம் அதனை நிராகரித்திருந்தது.

எனினும் திடீரென 25 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை உயர்த்தி முடிவெடுத்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று பெஃப்ரல் குறிப்பிட்டுள்ளது. (ம-7)



































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322 Visit Visas
077 77 19 322 Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1007)



ICT பிரத்தியேக குழு வகுப்புக்கள்
தரம் 10,11 ற்கான ICT [TM/EM] வகுப்புக்கள் நேரடியாகவும் zoom ஊடாகவும் நடைபெறுகின்றது. தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் கற்பிக்கப்படும்.
(15வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்)
தொடர்பு:-
077 628 6461
076 487 3525
(1716)




ஐக்கிய தேசிய கட்சியின் இளைஞர் மற்றும் தொழில் நிபுணர்கள் பிரிவின் யாழ் மாவட்ட ஒருங்

# ஐ.தே.கவின் யாழ். மாவட்ட ஒருங்கமைப்பாளராக ராஜாராம் நியமனம்

கமைப்பாளராக புருசோத்தமக்குரு ராஜாராம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனமானது கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்க பண்டார அவர்களால் கடந்த 15ஆம் திகதி வழங்கப்பட்டது.

ராஜாராம் அவர்கள் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றவர் என்பதுடன்,

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கியல் துறையில் பட்டமும் பெற்று சமகாலத்தில் CIMA கல்வியையும் பூர்த்தி செய்து கணக்காளராகப் பணி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


விற்பனைக்கு
2018ம் ஆண்டு நிசான் எக்ஸ்ரயல் (Nissan x-trail) வாகனம் விற்பனைக்கு உள்ளது.
இடம் - யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு:-
076 693 2227
(1723)



இந்தியன் விசா சேவைகள்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (260)



விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
1%
• Visit visa
• Student visa
• Fixed & saving
• லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
075 033 6759
(216)



சாரதி தேவை
AD சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள சாரதி தேவை.
வயது எல்லை 40 இற்கு மேல்
(விநியோகவான் ஒன்றுக்கு)
தொடர்புகளுக்கு :
077 978 9223
(261)



காணி விற்பனைக்கு
தனங்கிளப்பு கண்ணகை அம்மன் வீதியில் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நான்கு பக்கமும் முட்கம்பி வேலி, குழாய்கிணறு, தென்னைகள் உள்ளடங்கலாக.
பரப்பு - 6 இலட்சம்
077 220 3386
(1718)



பணிப்பெண் தேவை
யாழ். நல்லூரில் வசித்து வரும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 379 6961
077 221 2142
(1712)



காணி விற்பனைக்கு
தனங்கிளப்பில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் அருகாமையில் 4 பரப்பு, 4¾ பரப்புக் காணி சிறிய வீடு மின் இணைப்பு மற்றும் 4 பக்கமும் முட்கம்பி வேலி, தென்னைகள் உள்ளடங்கலாக.
பரப்பு - 7 இலட்சம்
077 220 3386
(1718)



IELTS CLASSES
கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% Special offer for all the courses
• GUARANTEED TO 7.5 in IELTS Exam.
• PASS in UK A1 Exam.
• Exam REGISTRATION CENTER.
(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970
(1469)



வீட்டுடன் காணி விற்பனைக்கு
நவாலி ஆனைக்கோட்டையில் வீட்டுடன் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (உடன் குடியமர்வதற்கு ஏற்ற நிலையில் உள்ளது) ஒரு பரப்பினுள் வீடு அமைந்துள்ளது. வீதியோரமாக உள்ள மற்றைய ஒரு பரப்பில் கடை, அன்றேல் வீடு கட்டுவதற்கு ஏதுவாக உள்ளது.
தொடர்புகளுக்கு:-
074 178 3315, 077 948 5437
(1729)



Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
CIMS College
49A, Chapel Street, Jaffna.
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322
(C-1006)



கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் - மூளாய்
கலாநிதி R.நித்தியானந்தன் அவர்களை
பாராட்டி வரவேற்கின்றோம்




நீரிழிவு நோய்த் தாக்கம் பற்றி பிரதேச மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக எமது வைத்தியசாலையுடன் இணைந்து 2005 ஆம் ஆண்டு முதல் நீரிழிவு நிலையத்தை நடாத்தி வருகின்றார்.

எமது பிரதேசத்தைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசித்து வருபவருமாகிய கலாநிதி R.நித்தியானந்தன் அவர்கள் ரட்ணம் அறக்கட்டளையின்(UK) நிதி அனுசரணையுடன் மக்களுக்கு நீரிழிவு நோய் பற்றிய வைத்திய ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்.

கலாநிதி R.நித்தியானந்தன் அவர்கள் 18.08.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை எமது வைத்தியசாலைக்கு வருகைதருகின்றார். அவர்களை வைத்தியசாலை சமூகமும் இவரால் பயன்பெறும் நோயாளர்களும் மனப்பூர்வமாக வரவேற்றுக்கொள்கின்றோம்.
(C-1001)

பணிப்பாளர் சபை மற்றும் பணியாளர்கள்
கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் - மூளாய்.



Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 239/= | Max 5Kg |
| 1 Kg கோதுமை மா | - 159/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1Kg செத்தல் மிளகாய் | - 760/= | |
| 1 Kg பொன்னி அரிசி | - 272/= | |
| 1Kg சம்பா | - 228/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 660/= | |
| 1 Kg Lanka கட்டி உப்பு | - 80/= | ~~115/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 360/= | ~~500/=~~ |
| 180 ml சன்சில்க் சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3450/= | ~~3900/=~~ |
| 70 g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 56/= | ~~80/=~~ |

400g Anchor
1010/=

~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (259)
Happy Supermarket
0777 8080 30



பதவி வெற்றிடங்கள்
முகாமைத்துவ மற்றும் கணக்கியல் உதவியாளர்கள் தேவை(பெண்கள்).
21.08.2024 மற்றும் 22.08.2024 திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் வருகை தரவும்.
1) க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி பெற்றிருக்க வேண்டும். (Result Sheet பிரதி)
2) பிறப்புச் சான்றிதழ் பிரதி
3) ஆள் அடையாள அட்டைப் பிரதி
4) வயதெல்லை :- (21 - 30)
குறிப்பு:- தகைமைக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5102
(C-1003)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.